janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 பிப்ரவரி 06 - 12 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 44




**களம் காண்போம்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 11 ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்தது. தற்போது >>>



ப 02

**மேற்கட்டுமானம் அடித்தளம்**


வரலாற்றை இயக்கும் சக்திகள் இந்த உற்பத்தி உறவுகளும், உற்பத்தி சாதனங்களும்தான் என்று தனது >>>



ப 05


**ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்**

மரணத்தை, இவ்வாறு எதிர் கொண்டவர்கள் ஒரு சிலரே! தனது மரணம் எப்பொழுது நிகழப் போகிறது என்பதை மிக நன்றாகவே >>>



ப 06

# ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை 2022 - 23




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா பிப்.1 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை 2022–23 மிகவும் பேரழிவுகரமான ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார்.

## டி.ராஜா கண்டனம்

பிப்.1 ஆம் நாள் ஒன்றிய அரசின் நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அதிகரிக்கக் கூடிய பேரழிவுகரமான நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கருதுகிறது.

பொருளாதார நெருக்கடி காரணமாக முன்பே பாதிப்புக்கு உள்ளாகியிருந்த நமது நாட்டின் பொருளாதாரம், பெருந்தொற்று சூழல் காரணமாக மேலும் மோசமடைந்துள்ளது. இந்நிலையில், நிதியமைச்சரின் பட்ஜெட் அறிவிப்புகள் பெரும் ஏமாற்றத்தைத் தருவதாகவும், பேரழிவை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன.

தேசத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு தீர்க்கமான அறிவிப்பும் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை.

பொருளாதார வளர்ச்சி 9.2 சதவிகிதமாக உயரும் என்று நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இது உண்மையில் சாத்தியமாகும் என்று நம்புவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை.

பெருந்தொற்று காலம் முழுவதும், உழைக்கும் மக்கள் தங்கள் வேலைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தபோது, அவர்களுக்குநிதியுதவி அளித்து அவர்களின்நுகரும்சக்தியை அதிகரிக்க வழிவகை செய்யாமல் தொழிலதிபர்களுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் சலுகைகளை வழங்குவதிலேயே இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. சலுகைகள் வழங்கப்பட்ட பின்பும் கூட உற்பத்தி பெருக்கம் ஏற்படவில்லை என்பதை தொழிற்துறை உற்பத்தி குறியீடு அம்பலப்படுத்தியுள்ளது.

வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நிதி நிலை அறிக்கையில் அதற்கான திட்டம் எதுவும் இல்லை.

விலையேற்றம் தொடர்கிறது; பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் மற்றுமொரு முதன்மையான பணியாகும். ஆனால், நிதிநிலை அறிக்கையில் இப்பிரச்சினை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் நிகர லாபம் கடந்த ஆண்டில் மட்டும் 93000 கோடி ரூபாய் என்று அரசாங்கம் தாக்கல் செய்துள்ள பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது. நிலைமை இவ்வாறு இருக்க, அரசாங்கம் பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவது கேலிக்குரிய செயலாக உள்ளது. ஏர் இந்தியா நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டு விட்டது. எல்.ஐ.சி. நிறுவனப் பங்குகள் விரைவில் தனியாருக்குத் தாரை வார்க்கப்படும் என்று நிதியமைச்சர் பெருமிதம் கொள்கிறார். நீலாஞ்சல் இஸ்பத் நிறுவனமும் குறிவைக்கப்பட்டுள்ளது.

ஐந்து உயர்கல்வி நிறுவனங்களுக்கு ‘சென்டர் ஆப் எக்ஸெலன்ஸ்’ என்ற சிறப்பு நிலை வழங்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. மேலும், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு சிவப்பு கம்பளவரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த அறிவிப்புகள் உயர்கல்வித் துறையில் தலித்துகள், பழங்குடி மற்றும் விளிம்பு நிலையில்

தொடர்ச்சி 3ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்




டைமண்டுக்கு வரி குறைப்பு

– நிர்மலா சீத்தாரமன்

## நிதிநிலை அறிக்கையில் கார்ப்பரேட்களுக்கு வெண்ணெய்;

# உழைக்கும் மக்களுக்கு சுண்ணாம்பு




நாட்டு மக்கள் தொகையில் மேல் தட்டில் உள்ள பத்து சதவிதத்தினர் நாட்டின் மொத்த வருமானத்தில் 57 சதவிதத்தை பெற்று வரும் நிலையில் அடித்தட்டில் உள்ள 50 சதவிதத்தினர் (அதாவது 65 கோடி மக்கள்) 8 சதவிதம் மட்டுமே பெறுவதை அண்மையில் சர்வதேச ஆய்வறிக்கை வெளிப்படுத்தியது. சமூக கொந்தளிப்பை உருவாக்கும் இந்த ஏற்றத்தாழ்வை சமப்படுத்துவதற்கான முயற்சியில் நிதிநிலை அறிக்கை ஈடுபடவில்லை என ஒன்றிய நிதிநிலை அறிக்கை குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார். இதுகுறுத்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மக்களவையில் தாக்கல் செய்துள்ளார். நாட்டு மக்கள் தொகையில் மேல்தட்டில் உள்ள பத்து சதவிதத்தினர் நாட்டின் மொத்த வருமானத்தில் 57 சதவிதத்தை பெற்று வரும் நிலை யில் அடித்தட்டில் உள்ள 50 சதவி தத்தினர் (அதாவது 65 கோடி மக்கள்) 8 சதவிதம் மட்டுமே பெறு வதை அண்மையில் சர்வதேச ஆய் வறிக்கை வெளிப்படுத்தியது.

தொடர்ச்சி 3ம் பக்கம் >>




# உள்ளாட்சி தேர்தல் 2022 களம் காண்போம்!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 11 ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்தது. தற்போது நடைபெற உள்ளது மகிழ்ச்சிக்குரியது.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நிர்வகிக்க வேண்டிய அமைப்புகளை அதிகாரிகளைக் கொண்டே நிர்வாகம் நடைபெற்று, அதன் காரணமாக பல்வேறு சீரழிவுகளை நகர்புறத்து மக்கள் எதிர் கொண்டமைக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிதாக மாநகரங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறங்களில் மட்டுமே ஒரு கோடியே 37 லட்சத்து, ஆறாயிரத்து 723 ஆண் வாக்காளர்களும், ஒரு கோடியே 42 லட்சத்து 45 ஆயிரத்து 637 பெண் வாக்காளர்களும் 4324 திருநங்கைகள் என மொத்தம் 2 கோடியே 79 லட்சத்து 56 ஆயிரத்து 754 வாக்காளர்கள் உள்ளனர்.

இத்தகைய வாக்காளர்கள் 21 மாநகராட்சிகளில் 1374 வார்டு உறுப்பினர்களையும், 138 நகராட்சிகளில் 3843 வார்டு உறுப்பினர்களையும், 490 பேரூராட்சிகளில் 7621 வார்டு உறுப்பினர்களையும் – ஆக மொத்தம் 12,838 மாநகர, நகர, பேரூர் உறுப்பினர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

வேட்புமனுத் தாக்கல் ஜனவரி 28ஆம் நாள் தொடங்கி பிப்ரவரி 4 வரை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு பிப்ரவரி 19ல் நடைபெற்று பிப்ரவரி 22–ல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

நடைபெறவுள்ள தேர்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாடாளுமன்ற, சட்டப்பேரவை தேர்தலுக்கு எத்தனை முக்கியத்துவம் உண்டோ அதே முக்கியத்துவம் இத்தேர்தலுக்கும் உண்டு என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றியை உறுதிப்படுத்திட வேண்டும்.

வகுப்புவாத கட்சியான பாஜக தமிழகத்தில் தடம் பதிக்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் இடைவிடாது மேற்கொண்டு வருவதை அலட்சியப்படுத்தல் ஆகாது.

மாநில உரிமைகளை பறித்து, அனைத்து அதிகாரங்களும் ஒன்றிய அரசுக்கே என கொக்கரித்து, சர்வாதிகாரியைப் போன்று ஒன்றிய அரசு செயல்பட்டு வருகின்றது.

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை அற்றவர்களாக தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

சட்டப்பேரவை நிறைவேற்றிய மசோதாக்கள் அலட்சியப் படுத்தப்படுகின்றன; புறக்கணிக்கப்படுகின்றன.

விடுதலை போராட்ட மாவீரர்களை புறந்தள்ளி, அலட் சியப்படுத்தி, அவமானப்படுத்தப்படும் செயல்களை நாம் முன்னெப்போதும் கண்டதில்லை.

உலகமே போற்றிய, உலக மகாகவி என போற்றிப் புகழப்பட்ட நமது மகாகவி பாரதியை தெரியாது.

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்த ஒரு நாட்டிலும் செக்கிழுக்கும் தண்டனையை தந்ததாக நாம் அறியோம், அத்தகைய கொடிய தண்டனையை நமது கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு அறிவிக் கப்பட்டது.

வெள்ளையர்களின் கொள்ளை ஆட்சிக்கு எதிராக சுதேசி கப்பல் விட்டு வெற்றிகண்ட, சிதம்பரனாரை கப்பல் வியாபாரி எனக் கூறுகின்றனர்.

இழந்த நாட்டை மீட்க ஆயுதம் ஏந்திப் போராடிய வீர மங்கை வேலு நாச்சியாரை தெரியாது என்கின்றனர்.

வீர மங்கையுடன் இணைந்து போர்க்களம் கண்ட தலித் பெண்ணான குயிலி உடல் முழுவதும் தீ வைத்துக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கை அழித் திட தன்னைத்தானே அழித்துக் கொண்ட குயிலியை அவமானப்படுத்துகின்றனர்.



வெள்ளையர்களோடு சமர் புரிந்த காரணத்தால் மருது சகோதரர்களை தூக்கிலிட்டு கொன்றனர். அத்தகைய மாவீரர்களை ஒன்றிய ஆட்சியாளர்கள் தெரியாது என்கின்றனர்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று பல்வேறு சித்திரவதை கொடுமைகளுக்கு ஆளான அப்பழுக்கற்ற தியாக செம்மல்களை புறந்தள்ளும் கூட்டம்தான் பாஜக என்பதனை மறந்து விட இயலாது.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்மிக்க பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷியால் தேசத்தின் தந்தை எனப் புகழப்பட்ட தேசபிதா காந்தியை அவமதிப்பது மட்டுமல்ல, அவரைக் கொன்ற கொடூரன் கோட்சேயை போற்றிப் புகழும் கூட்டம் தான் இன்றைய பாஜக என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

“காந்தியை ஏன் கொன்றேன்” என திரைப்படம் தயாரித்து, காந்தியை கொன்றதை நியாயப்படுத்தி, கோட்சே காந்தியடிகளைக் கொன்றது மிகச்சரியே என திரைப்படம் வெளிவருகின்றது, கோட்சேவாக ஒரு நாடாளுமன்ற உறுப் பினரே நடிக்கின்றார் என்றால், எத்தகைய தீங்கையும் நாங்கள் செய்வோம் என்று ஆணவத்தோடு செயல்படுகின்றார்கள் என்பதனை மிக எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

உத்தரபிரதேச மாநிலத்தில் விவசாயிகள் போராட்டத்தில் காரை ஏற்றி பத்திரிகையாளர் உட்பட எட்டு பேரின் உயிரைப் பறித்தவன் ஒன்றிய அரசின் உள்துறை இணை அமைச்சரின் மகன். இக்காயம் இன்னும் ஆறி விடாத நிலையில் ஒரிசா மாநிலத்தில், ஒன்றிய அரசின் இணை அமைச்சர் ஆய்வுக்கு செல்கின்றார். அவர் ஆய்வு செய்திட தேர்ந்தெடுத்திட்ட அலுவலகம் அரசு அலுவலகம் அல்ல. மாறாக பாஜக கட்சி அலுவலகத்தில் ஆய்வு செய்கின்றார். அங்கே உயர் அதிகாரிகளை அழைக்கின்றார். அவர்களும் வேறு வழி யின்றி வருகின்றனர். குறிப்பிட்ட கோப்புகளை அதிகாரிகள் எடுத்துவரவில்லை என அதிகாரிகளை தாக்குகின்றார்; நாற்காலிகளை எடுத்து வீசி அடிக்கின்றார்.

அமைச்சர் பெருமானின் இத்தாக்குதலால் இரண்டு அதி காரிகள் படுகாயமுற்றனர். ஒரு அதிகாரியின் கை எலும்பு உடைக்கப்பட்டது, இரு அதிகாரிகளும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இத்தகைய இரு சம்பவங் களுக்கும் தலைமைதாங்கும் பிரதமர் இந்நாள்வரை வருத்தமோ, கண்டனமோ தெரிவிக்கவில்லை. நடைபெறுவது ஜனநாயக ஆட்சியா? அல்லது ரவுடிகளை கொண்ட ஆட்சியா? என ஐயம் ஏற்படுகின்றது.

இத்தகைய அமைச்சர்களின் ரவுடியிசம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் காவல் துறையால் தேடப்பட்டு வரும் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவரும் இன்று தமிழக பாஜகவில் உறுப்பினர்கள் மட்டுமல்ல, அவர்கள் கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகின்றனர்.

மதவெறிக்கு இடமளிக்காத சகோதரத் தன்மையுடன் ஒன்றுபட்டு வாழும் தமிழக மக்களிடையே மதவெறியை தூண்டி, சாதி வெறியை தூண்டி, மோதலை உருவாக்கி, மக்களை மதரீதியாக, சாதி ரீதியாக பிளவுபடுத்தி, தங்களின் குறுகிய அரசியல் ஆதாயத்தை நிறைவேற்றிக்கொள்ள படுபாதக செயல்களை புரிந்து வரும் பாஜக என்பதனை நாம் மறந்து விடக் கூடாது.

மக்களால் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட வேண்டிய பாஜக தன் இருப்பை தக்கவைத்துக்கொள்ள பலவீனப்பட்டுள்ள அதிமுகவை பயன்படுத்தி தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயல்கின்றது.

அஇஅதிமுக எதிர்கட்சியாக செயல்படவில்லை. அவர்களிடத்தில் ஆண்மை இல்லை என்று பாஜகவை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். உடனே அக்கட்சியின் தமிழகத் தலைவர், இவ்வாறு கூறியது அவரது தனிப்பட்ட கருத்து, கட்சியின் கருத்தல்ல, அதிமுக சிறந்த எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகின்றது, அதிமுக – பாஜக உறவு என்பது இயற்கையாக அமைந்தது, எங்கள் கூட்டணி தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வரும் நகராட்சி அமைப்பு களுக்கான தேர்தலில் அதிமுகவும், வகுப்பு வாத சர்வாதிகார கட்சியான பாஜகவும் ஒன்றிணைந்து தேர்தல் களம் காண உள்ளன என்பது வெளிப்படுகின்றது.

தமிழ்நாட்டில் வகுப்புவாத சக்திகளுக்கு இடம் இல்லை என்பதனை நாடாளுமன்ற, சட்டப்பேரவை மற்றும் ஊர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் மெய்ப் பித்துள்ளோம். மீண்டும் அதனை உறுதி யாக உறுதிப்படுத்திட, வரும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களுக்கான தேர்தலிலும் நாம் நிலைநாட்டிட வேண்டும்.

அரசியல் ரீதியாக வகுப்புவாத சக்திகளை, அவர்க ளுடன் இணைந்து வருபவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்வதுடன் நமது அணியின் வெற்றியையும், குறிப்பாக நமது கட்சியின் வெற்றியையும் உறுதிபடுத்திட முனைப்பாக செயல்பட வேண்டும். நகர்ப்புற மக்களின் தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

சுகாதாரம், குடிநீர், சாலை வசதிகள், மின்சாரம், கல்வி, மருத்துவம் என பல பிரச்சனைகள் குட்டை போல் தேங்கிக் கிடக்கின்றன. நல்ல, நேர்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவதன் மூலமே மேற்கண்ட மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு காண முடியும்.

நமது கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறக் கூடிய தோழர்கள் பதவிக்காக அல்ல, பொறுப்புகளை ஏற்று மக்களுக்கு பணியாற்றக் கூடிய மிகச் சிறந்த ஊழியர்களாக செயல்படுவார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

நமது கட்சி போட்டியிடக் கூடிய வார்டுகளை தேர்வு செய்து, நமது அணிக்கு தலைமை தாங்கும் திமுக மாவட்ட பொறுப்பாளர்களுடன் பேசி சுமுக தீர்வை எட்டி மற்ற தோழமை கட்சி தோழர்களோடு இணைந்து ஒன்றுபட்டு களம் கண்டு, நமது வெற்றியை, நமது அணியின் வெற்றியை உறுதி படுத்த வேண்டும். இதன் மூலம் தமிழகத்தில் வகுப்புவாத பிற்போக்குத்தனமான அணிக்கு கிஞ்சிற்றும் வாய்ப்பளிக்க மாட்டோம் என்ற நமது கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை மீண்டும் உறுதியாக நிலைநாட்டி வெற்றி வாகை சூடிட தேர்தல் களம் காண்போம்! வெற்றி பெறுவோம்! **மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

தோழமைமிக்க

இரா.முத்தரசன்

## ஏழை மக்களை இழிவுபடுத்தும்

# ஒன்றிய அமைச்சர் கபில் பாட்டில் பொது மன்னிப்பு கேட்க வேண்டும்

## ஆனிராஜா வலியுறுத்தல்

2022 ஜனவரி 30 அன்று மகாராஷ்டிர மாநிலம் தானேவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ்துறை இணை அமைச்சர் கபில் பாட்டில் பேசியதாக, வெளியாகியுள்ள கருத்துக்களை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மோடி பிரதமராகப் பொறுப்பேற்று இருப்பது வெங்காயம், உருளைக் கிழங்கு மற்றும் பருப்புகளின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு இல்லை. ஆனால், அதற்கு மாறாக அரசியல் அமைப்பு சட்டத்தின் சரத்து 370ஐ நீக்குவது போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்காகவே என்று அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதிகள் 2024ஆம் ஆண்டில் இந்தியாவுடன் இணைக்கப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். 750 ரூபாய்க்கு ஆட்டிறைச்சியும், 600 ரூபாய்க்கு பிஸ்தாவும் வாங்கும் மக்கள், தக்காளி மற்றும் வெங்காய விளையேற்றத்தைப் பற்றி குறை கூறுகிறார்கள் என்று பகடி செய்துள்ளார்.

இதுபோன்ற கருத்துக்கள் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் கருத்தியல் மற்றும் அவர்கள் முன்னுரிமை அளிக்கும் பிரச்சினைகள் எவை என்பதை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. அவர்களின் இது போன்ற பேச்சுக்கள் மக்களின் வாழ்க்கை மற்றும் தேசத்தின் வளர்ச்சி பற்றிய அடிப்படையான பிரச்சினைகளிலிருந்து நமது கவனத்தை திசை திருப்புவதாக உள்ளன.

விவாதங்கள் அனைத்தும் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் சார்ந்ததாகவே இருக்கின்றன. பெரும் பணக்காரர்கள் மற்றும் கார்ப்பரேட்டுகளால் இந்த அரசாங்கள் நடத்தப்படுகிறது என்பதை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. ஒரு வேளை சாப்பாட்டிற்குக் கூட போராடும் இந்நாட்டின் 70 சதவீத மக்களின் நல்வாழ்வு குறித்து இந்த அரசாங்கம் அக்கறை கொள்வதாக இல்லை.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வேலையின்மை, வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றை இப்போது நமது நாடு எதிர் கொண்டு வரும் இந்தச் சூழலில், அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை விமர்சிப்பது என்பது கண்ணியத்துடன் வாழ்வதற்கான அவர்களது அடிப்படை உரிமை மீது தொடுக் கப்படும் மோசமான நேரடித் தாக்குதல் ஆகும். இந்தியாவில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான பெண்கள், ஏறத்தாழ 75 சதவிகித குழந்தைகள் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தொற்று காரணமாக உருவாகியுள்ள உணவு மற்றும் சுகாதார நெருக்கடிகளால் பெண்கள், மற்றும் குழந்தைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இந்தி யாவில் உள்ள சுமார் 5.3கோடி வேலைவாய்ப்பற்ற நபர்களில் பெரும் பகுதியினர் பெண்கள் ஆவர். பெருந்தொற்று காலத்தில் சுமார் 41 லட்சம் நபர்கள் தங்கள் வேலைகளை இழந்து தரமான சரிவிகித உணவிற்கு கூட வழியின்றி தவித்து வருகின்றனர் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் பெருந்திரளான மக்கள் அன்றாடம் சந்திக்கும் உணவுப் பிரச்சினை, விலை ஏற்றம், கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியமானப் பிரச்சினைகள் குறித்து இந்த அரசாங்கம் செயல்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

மக்களுக்கு சேவை புரிந்திடவே தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை மக்கள் பிரதிநிதிகள் நினைவில் கொள்ள வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கைக்கான பொதுமக்களின் அடிப்படை கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து நிறைவேற்றுவது ஆட்சியாளர்களின் கடமையாகும். அமைச்சர் கபில் பாட்டில் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், அவர் மீது பா.ஜ.க. வும், ஒன்றிய அரசும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்துகிறது. இவ்வாறு இந்திய தேசிய மாதர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



## ஆர்.சி.எச். தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுக

### மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளரிடம் நேரில் முறையீடு

தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக, தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன் அவர்களை, பிப்.01 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், தலைவர் என்.எஸ். செல்வராஜ், பொதுச் செயலாளர் டாக்டர். ஏ.ஆர்.சாந்தி மாநில துணைத் தலைவர் எஸ்.நிலாஒளி, பிரச்சார செயலாளர் எம்.திருமாத்தாள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.ராஜலட்சுமி ஆகியோர் சந்தித்தனர்.

# குடியரசு முடியரசாக மாறிவிடுமோ?

## எம்.செல்வராசு எம்.பி. பேச்சு



மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகக்குழு, மாவட்டக்குழு கூட்டங்கள் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு நாகை நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.செல்வராசு பேசியதாவது:

நமது நாட்டின் 73 வது குடியரசு தின விழா கொண்டாடப்படுகிற இத் தருணத்தில் நமது குடியரசு முடிய ரசாக மாறிவிடுவோமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்காகப்பாடுபட்டவர்களின் தியாகம் புறக்கணிக்கப்படுகிறது, மறைக்கப்படுகிறது. மன்னர்கள் ஆட்சியை போல சர்வாதிகார குரல் ஓங்கி ஒலிக்கக்கூடிய அவலநிலை இந்தியாவில் எழுந்துள்ளது. இந்திய ஒன்றிய அரசு மக்களின் மேல் வரித் திணிப்பு, விலைவாசி உயர்வு, வேலையின்மை, ஆட்குறைப்பு போன்றவைகளால் மோசமான நிலை உள்ள நேரத்தில், புதிய இந்தியாவை உருவாக்குவோம் என்ற பெயரில் "ஸ்மார்ட் இந்தியா, மேக் இந்தியா, ஸ்வச் இந்தியா" என்ற வார்த்தை ஜாலங்களின் மூலம் மக்களை திசை திருப்புகிற சூழல் தான் இவ்வரசால் பின்பற்றப்படுகிறது என பேசினார்.

பின்னர் நடைபெற்ற மாவட்டக்குழு கூட்டத்திற்கு கே.ராமன் தலைமையில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் வேலையறிக்கை வைக்கப்பட்டது ஜனசக்தி சந்தா மற்றும் சிறப்பு மலர் பற்றி அனைத்து ஒன்றியங்களுக்கும் விளக்கமாக சொல்லப்பட்டது .

வி.ச. மாவட்ட செயலாளர் பி.வீரராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், சீர்காழி ஒன்றிய செயலாளர் எம். செல்லப்பன், குத்தாலம் ஒன்றிய செயலாளர் எஸ்.என்.அறிவழகன், செம்பனார்கோயில் ஒன்றிய செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, மயிலாடுதுறை ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சிவராமன் மற்றும் மாவட்ட நிர்வாகக்குழு தோழர்கள் எஸ்சி கணபதி, வி.தொ.ச. மாவட்ட செயலாளர் ஆர்.இடும்பையன் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள மக்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை மறுக்கக்கூடிய வர்க்கப் பிளவை மேலும் அதிகரிக்கவே வகை செய்யும். சுகாதாரம் மற்றும் சமூகநலன் சார்ந்த இதர துறைகளிலும் அரசாங்கத்தின் அணுகுமுறை இவ்வாறாகவே உள்ளது.

வேளாண்துறைக்கான மொத்த ஒதுக்கீடு 4.26 சதவிகிதத்தில் இருந்த 3.84 சதவிகிதமாக குறைந்துள்ளது. குறைந்தபட்ச ஆதார விலை குறித்து உறுதிமொழி எதுவும் வழங்கப்படவில்லை. நிதிப்பற்றாக்குறை நிச்சயமாக உயரும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. வரிச்சலுகைகள் எதுவும் வழங்கப்படாததால் மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்த மக்களின் பாதிப்பு தொடரும். இந்த நிதிநிலை அறிக்கை தற்போது தேசத்தை சூழ்ந்துள்ள எந்தவொரு பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வு கூறுவதாக இல்லை. கார்ப்பரேட் மற்றும் பெருநிறுவனங்களின் கொள்ளைக்கு அடிமை சேவகம் புரிந்திடவே புனையப்பட்டுள்ளது. இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

**ராகுல்காந்தி:** காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி "சம்பளம் பெறுவோர், நடுத்தர மக்கள், ஏழைகள்உள்ளிட்ட சாதாரண மக்களுக்குபட்ஜெட்டில் ஒன்றுமில்லை. சமூகத்தில் நலிந்த பிரிவினர்,இளைஞர்கள், விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு எதுவும் கூறப்படவில்லை. பிரதமர் மோடி அரசின்இந்த பட்ஜெட் வெறும் பூஜ்ஜியம்" என்று கூறியுள்ளார்.

**சீதாராம் யெச்சூரி:** மார்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி "இது ஒரு மக்கள் விரோத பட்ஜெட். பொய்களும், பொய்யான புள்ளிவிவரங்களும் கொண்டுள்ள படஜெட். கார்ப்பரேட் நலன்களுக்கு உகந்த இந்த பட்ஜெட் எதிர்க்கப்பட வேண்டிய படஜெட்." என்று கூறியுள்ளார்.

**மு.க.ஸ்டாலின் :** தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் "மக்களின் நலனை மறந்த நிதிநிலை அறிக்கை. தமிழக அரசு கோரிய திட்டங்களுக்கு நிதியுதவி இல்லை. சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்கும் திட்டங்கள் – ஆக்கப்பூர்வமான மானியங்கள் எதுவும் இலலை. பெருத்த ஏமாற்றத்தை அளிப்பதாக உள்ளது." என்று கூறியுள்ளார்.

# மக்கள் பிரச்சினைகளைப் பேசாத குடியரசுத் தலைவரின் உரை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

குடியரசுத் தலைவரின் உரை குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நாடாளுமன்ற அவைகளின் கூட்டு அமர்வில் நிகழ்த்தப்பட்ட குடியரசுத் தலைவர் உரை இந்திய மக்கள் எதிர் கொண்டு வரும் உண்மையான பிரச்சினைகளை எழுப்புவதில் தோல்வி கண்டுள்ளது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. கோவிட் 19 பெருந்தொற்று உண்டாக்கிய வீழ்ச்சி முதல் அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் பணவீக்கம் உள்ளிட்ட எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு சமாளிக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதை குடியரசு தலைவர் உரை தெளிவுபடுத்துவதாக உள்ளது. பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பது போல் மழுப்பப்படுகிறது.

அரசாங்கத்தின் தனியார்மயக் கொள்கையே வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஊர்தி என்று விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், எதார்த்தத்தில் அதன் முறைமுக அரசியல் செயல்திட்டத்திற்கான தனியார் மூலதன உதவியைப் பெறுவதற்காக தேசிய சொத்துக்களை விற்பனை செய்திடவே தனியார்மயம் வகை செய்கிறது. சிறப்பாக இயங்கி, லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பும், பாதுகாப்பும் வழங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்கள் முடக்கப்பட்டுள்ளன. பணக்காரர்களை மேலும் செழிப்படையச் செய்வதோடு இந்தியாவில் ஏழைகள் மற்றும் பணக்காரர்களுக்கு இடையிலான இடைவெளியை தனியார்மயம் அதிகரிக்கச் செய்கிறது.

கோவிட் 19 பெருந்தொற்று இரண்டாம் அலை உருவாக்கிய பேரழிவு மற்றும் கோவிட் 19 தடுப்பூசி விவகாரத்தில் அரசாங்கத்தின் பரிதாபரமான நிலை குறித்த உண்மைகளை குடியரசுத் தலைவர் உரை எடுத்துரைக்கத் தவறிவிட்டது.

அரசாங்கத்தின் தோல்வியை மக்கள் முற்றாக மறந்துவிடுவார்கள் என்று ஆட்சியாளர்கள் முனைப்பு காட்டுகிறார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக செயலற்று பரிதவித்த புலம் பெயர் தொழிலாளர்களை நாடு ஒருபோதும் மறந்துவிடாது. அரசாங்கத்தின் படுதோல்வியால் தங்களின் ஆருயிர் சொந்தங்களை இழந்து நிற்கும் மக்கள் உரிய நேரத்தில் எதிர்வினையாற்ற உள்ளார்கள்.

தேர்தல் பரப்புரைக்காக விடுதலைப் போராட்ட வீரர்களான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொடங்கி பிர்சா முண்டா உள்ளிட்டவர்களின் பெயர்களை அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது. அரசாங்கத்தின் இந்தப் போக்கு உண்மையில் இந்திய அரசின் எதார்த்த நிலைக்கு எதிராகவே இருக்கிறது. எதிர்க்கருத்துக்களை எதேச்சதிகார முறைகொண்டு அடக்குவது முதல் நாட்டின் குடிமக்களை சட்டவிரோதமாக கண்காணிப்பது வரை, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறித்திடவும், அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உத்தரவாதங்களை அழித்திடவும், இந்த அரசாங்கம் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திவருகிறது. இவ்வாறு தேசிய செயற்குழு சாா்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

சமூக கொந்தளிப்பை உருவாக் கும் இந்த ஏற்றத்தாழ்வை சமப்படுத் துவதற்கான முயற்சியில் நிதிநிலை அறிக்கை ஈடுபடவில்லை. 142 கோடீஸ்வரர்களிடம் குவிந்து வரும் செல்வக்குவிப்பை மேலும் பெருக் குவதில் நிதிநிலை அறிக்கை அக் கறைகாட்டுகிறது. அடித்தட்டு உழைக்கும் மக்களை வஞ்சித்து விட்டது.

கொரோனா நோய்த்தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் பாஜக ஒன்றிய அரசு செய்த குளறுபடியால் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் பெரும் இழப்புகளை சந்தித்துள்ளன. இவைகளை மீட்க கடனுதவி அறிவிப்பு மட்டும் பயன் தராது. விவசாயிகளின் விளை பொருட் களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பதை சட்டபூர்வமாக உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. ஸ்டார்ட் அப் தொழில்கள் முடங்கி நிற்கின்றன. அவைகளுக்கு மேலும் ஐந் தாண் டுகள் ஊக்குவிப்பு உதவி தேவை எனக் கோருவதை நிதிநிலை அறிக்கை கவனத்தில் கொள்ள வில்லை.

இயற்கை பேரிடர் காலங்களில் மாநில அரசுகளுக்கு ஆதரவு கரம் நீட்டுவதில் பாகுபாடு காட்டிவரும் ஒன்றிய அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது நம்பிக்கை அளிப்பதாக இல்லை.

பெரும் நிறுவனங்களின் கூடு தல் வரி ஐந்து சதவிதம் குறைக் கப்பட்டுள்ளது. சமூக உற்பத்தியில் உருவாகும் சொத்துக்களை குவித்து வரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கண்களுக்கு வெண்ணெய் தடவும் நிதிநிலை அறிக்கை, வேலையில் லாமலும் வருமானம் இழந்தும் கதறி அழுதுவரும் ஏழை மக்களின் கண்களில் சுண்ணாம்பு வைத்து தேய்த்துள்ளது என இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார் பில் மாநிலச் செய லாளர் இரா. முத்தரசன் வெளியிட் டுள்ள அறிக் கையில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 84 இதழ் 44

## அம்ரிட் கால், கதிசக்தி, ஹர் கர் நல் சே ஜல்!

2022–23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை வைக்கப் பட்டுவிட்டது.

வருகிற ஒரு ஆண்டில் நாட்டு மக்கள் நலனையும், நாட்டு நலனையும் பாதுகாக்க என்னென்ன செலவுகள் உள்ளன என பட்டியலிட்டு, அதற்கான வருவாயை ஈட்டுவதற்கான வகைகளைக் கண்டறிகிற திட்டம்தான் பட்ஜெட்.

கல்வி, மருத்துவம், உணவு, கண்ணியமான வாழ்க்கை, இதனை உறுதிப்படுத்தும் வேலையும் ஊதியமும், உணவு மற்றும் தொழில் உற்பத்தி, உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றைப் பேணுவது அரசின் கடமை.

‘‘இப்போது நாட்டின் முதல் 10% பணக்காரர்களிடம் இந்தியாவின் மொத்த சொத்துக்களில் சரி பாதி உள்ளது. அதே நேரத்தில் மொத்த ஜனத் தொகையில் 50% மக்களிடம் வெறும் 6% சொத்துக்களே உள்ளன. பணக்காரர்களுக்கு விதிக்கப்பட்ட செல்வவரியை மீண்டும் அறிமுகப்படுத்தி, தற்காலிகமாகவாவது 1% கூடுதல் வரி விதித்தால் எதிர்கால சந்ததியின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கு தேவையான வருவாயை ஈட்ட முடியும்‘‘ என சமீபத்திய ஆக்ஸ்ஃபாம் பொருளாதார அறிக்கை கூறியது.

இதற்கு நேர் எதிரானது இந்த நிதிநிலை அறிக்கை.

2020 ஆம் ஆண்டில் புதிய கல்விக் கொள்கையை கொண்டுவந்த ஒன்றிய அரசு, நாட்டின் மொத்த உற்பத்தி குறியீட்டில் (ஜிடிபி) கல்விக்காக 6% நிதி தருவது முடிவு செய்தது. ஆனால் பட்ஜெட்டில் 3.1% மட்டுமே ஒதுக்கீடு. மோடி அரசு மதிப்பிட்ட தொகையிலேயே கிட்டத் தட்ட சரி பாதி. காசு இருந்தால் தனியாரிடம் கட்டணம் கட்டி கல்வி பெறுக என்பதே இதன் பொருள்.

மருத்துவத்துக்கு சென்றாண்டு 74,820 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இப்போது கிட்டத்தட்ட சரி பாதியாக குறைத்து 47,011 ரூபாய் கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளனர். நாட்டின் மொத்த உற்பத்தி குறியீட்டில் இது வெறும் 2.1% மட்டுமே.

சென்ற ஆண்டு 4.2 லட்சம் கோடி ரூபாயாக இருந்த உணவு மானியத்தை 2.4 லட்சம் கோடியாக குறைத்து விட்டார்கள். இது பொது விநியோகத் திட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். 3.2 கோடி வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், ‘‘ஹர் கர் நல் சே ஜல்’’ எனப் பெயரிடப்பட்டுள்ளது

ஆட்சிக்கு வரும்போது ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்றார்கள். ஆனால் ஒவ்வொரு ஆண்டிலும் 2 கோடி பேருக்கு, இருந்த வேலையும் பறிபோனது. இப்போது வரும் 5 ஆண்டுகளில் 60 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் போகிறார்களாம். அதுவும் சுயவேலை. ஏற்கனவே பிரதமர் பரிந்துரைத்ததைப்போல பக்கோடா விற்கும் வேலையாக இருக்கும்.

நிதி அமைச்சர் தனது 92 நிமிட பேச்சில் இரண்டரை நிமிடம் விவசாயம் குறித்து பேசியிருக்கிறார். தனியார் பங்களிப்போடு விவசாயத்தில் டிஜிட்டல் மற்றும் உயர் தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படுமாம். மூன்று வேளாண் சட்டங்களில் ஏற்கனவே சொன்னதை, இப்போது வேறு வகையில் செயல்படுத்துகிறார்கள். விவசாய செலவில் இருமடங்காக விவசாயிக்கு விலை கிடைப்பதைப் பற்றி மூச்சு விடவில்லை.

நெடுஞ்சாலைகள், ரயில்வே, விமான நிலையம், துறைமுகம், சாலை மற்றும் நீர்வழி போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்த புதிய திட்டம் ‘கதிசக்தி’ அறிமுகமாகிறது. அது வேறொன்றுமில்லை, இவற்றையெல்லாம் தனியாரிடம் ஒப்படைப்பதுதான்.

ஏர் இந்தியா விமான நிறுவனத்துக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருந்தது. டாடா 15,000 கோடி கொடுத்து, மொத்த கடனையும் அடைத்து விட்டார்! மீதி 55 ஆயிரம் கோடி ஸ்வாஹா! பிறகு இன்னொரு 2,700 கோடி ரூபாய் விலைக்கு 144 விமானங்களை அவருக்கு விற்றுவிட்டார்கள். பிரதமர், குடியரசுத் தலைவருக்காக வாங்கப்பட்ட விமானத்தின் விலை 8000 கோடி என்பதைக் கணக்கில் கொண்டால், டாடாவுக்கு ஓசியாகவே ஏர் இந்தியா போய்விட்டது.

இதே கதிதான் எல்ஐசி, ஸ்டீல், நெடுஞ்சாலை, மின்சாரம் எல்லாவற்றுக்கும் நிகழப்போகிறது. இதுதான் ‘கதி சக்தி’.

பெரும் பணக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கார்ப்பரேட் வரி முன்பு 30% ஆக இருந்ததை 22% ஆகவும், பின்னர் 18% ஆகவும் குறைத்தார்கள். இந்த பட்ஜெட்டில் அது 15%ஆக மேலும் குறைக்கப்பட்டுள்ளது. பாவம்! இந்த நிதியாண்டில் இன்னொரு 20 30% சொத்துக்களை வாங்கட்டும்.

ஓர் ஆண்டுக்கான பட்ஜெட் என்றாலும் இது அடுத்த 25 ஆண்டு காலத்துக்கானதாம். இதை அமிர்த காலம் ( அம்ரித் கால்) என்று பட்ஜெட் கூறுகிறது.

உண்மையில் நாட்டுக்கு இது போதாத காலம்!



## காந்திஜி நினைவு நாளில் சிபிஐ புகழஞ்சலி

உலகம் போற்றும் ’தேசத் தந்தை’ மகாத்மா காந்திஜியின் 74வது நினைவு தினத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் டி.ராஜா புகழஞ்சலி செலுத்தினார். ‘இன்று மகாத்மா காந்திஜி உயிருடன் இருந்தால், நிச்சயம் அவர் பாஜகவின் பிளவுபடுத்தும் மதவாத, பாசிச அரசியலைக் கண்டித்திருப்பார்’ என அஞ்சலி உரையில் கூறினார்

கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் நடந்த புகழஞ்சலி நிகழ்ச்சியில் காந்திஜியின் திருவுருவப் படத்திற்கு அனைவரும் முதலில் மலரஞ்சலி செலுத்தினர். கூட்டத்தில் தேசியக்குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி, தேசியக்குழு உறுப்பினர்கள் அனில் ரஜீம்வாலே, கிருஷ்ணா ஜா, டாக்டர் ஏ ஏ கான் மற்றும் என் சிதம்பரம் உள்ளிட்ட தலைவர்களும், முழு நேரக் கட்சித் தோழர்களும் கலந்து கொண்டனர்.

1948 ஜனவரி 30 அன்று புது டெல்லி பிர்லா மந்திர் இல்லத்தில் நடைபெற்ற பிராத்தனைக் கூட்டத்தில் உலகம் புகழும் உத்தமர் மகாத்மா காந்திஜி இந்து மகாசபா உறுப்பினரான நாதுராம் கோட்ஸேவால் மூன்று முறை சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். காந்தியின் 74வது நினைவு நாள் புகழஞ்சலி நிகழ்வில் டி ராஜா மேலும் பேசும்போது மகாத்மா காந்தியின் மேற்கோளை எடுத்துக் காட்டினார்: ‘‘அனைத்து சமயங்களும் உண்மை என்ற முடிவுக்கு நான் வெகுகாலம் முன்பே வந்து விட்டேன்; மேலும், அனைத்துச் சமயங்களிலும் அதனிடத்தில் சில தவறுகளும் இருந்தன.

நான் என்னுடைய சமய நம்பிக்கையைப் பற்றி நிற்கும்போது, நான் பிற சமயங்களையும் என்னுடைய நேயத்திற்குரிய இந்துயிசம் போன்றே எண்ணிப் பற்றிட வேண்டும்.

எனவே நாம் இந்துவாக இருந்தால், இதை மட்டும் பிராத்தனை செய்யலாம் : அதாவது ஒரு கிருஸ்துவர் இந்துவாக மாற வேண்டும் என்று எண்ணத் தேவையில்லை; மாறாக, ஓர் இந்து இன்னும் மேம்பட்ட நல்ல இந்துவாக; ஓர் இஸ்லாமியர் மேலும் மேம்பட்ட முஸ்லீமாக; ஒரு கிருஸ்துவர் இன்னும் மேம்பட்ட கிருஸ்வராக மாற வேண்டும்’ என்பதைப் பிராத்தனை செய்யலாம்’’ என காந்திஜி மிக உறுதிபடத் தெரிவித்தார்.

தம் வாழ்நாள் முழுமையும் காந்திஜி இந்து முஸ்லீம் ஒற்றுமை, மத நல்லிணக்கம் மற்றும் பண்பாட்டு கலாச்சார பன்மைத்துவத்திற்காக உறுதியாக நின்றார் என்று கூறி தமது புகழஞ்சலி உரையை நிறைவு செய்தார்.

## இணையவழி முன்பதிவில் மட்டுமே அரசு நெல் கொள்முதல்



## விவசாய சங்கம் சார்பில் டெல்டா மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

இணையவழியில் முன்பதிவு செய்து மட்டுமே விவசாயிகள் அரசு கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்திட முடியும் என்று மத்திய அரசு குறுவை நெல் விற்பனையின் போதே உத்தரவிட்டது. அப்போது ஏற்பட்ட விவசாயிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டு, சாகுபடிக்கான சான்று மட்டுமே கொடுத்தால் போதும் என பழைய முறையிலேயே நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்போது சம்பா நெல் விற்பனையின்போது மீண்டும் இம்முறையை திணிக்கிறது. இதனால் காலத்தில் நெல் விற்பனை செய்ய முடியாமலும், சாகுபடி சான்று கிடைக்கவாய்ப்பில்லாதவர்கள் தனியார்களிடம் அவர்கள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய நிலையும், கொள்முதலில் குழப்பநிலைகளும், விவசாயிகளுக்கு கூடுதல் செலவும் வீண் அலைச்சலும் ஏற்படும் என்பதால் விவசாயிகளிடம் மிகப்பெரிய எதிர்ப்பு வந்தது.

இதனால் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் காலத்தில் பிரதமர் மற்றும் தமிழக முதல்வர் அவர்களுக்கு விளக்கமான மனுவை அனுப்பினோம். உணவுத்துறைஅமைச்சர் கூட்டிய கூட்டத்தில் பங்கு கொண்டும் இதைகைவிட வலியுறுத்தினோம். அதன் பின்கொள்முதல் நிலையங்களிலும் இணையவழி பதிவுசெய்யலாம் என்கிற ஒரு அறிவிப்பு மட்டுமே வந்துள்ளது. இதனால் நெல் கொள்முதலில் விவசாயிகளின் இடர்பாடுகள் நீங்காது.

எனவே தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஜன. 28 அன்று டெல்டா மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

திருவாரூரில் பி.எஸ்.மாசிலாமணி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், எம்.செல்வராஜ் எம்.பி, வை.சிவபுண்ணியம் முன்.எம்.எல்.ஏ, வை.செல்வராஜ் முன். மாவட்ட ஊராட்சி தலைவர், கே.மாரிமுத்து எம்எல்ஏ மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம், திருமருகல் ஆகிய மையங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 300 விவசாயிகள் பங்கு கொண்டனர். சங்க மாவட்ட செயலாளர் ஆர்.கே.பாபுஜி, மாவட்ட தலைவர் வி. சரபோஜி ஆகியோர் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் பங்குகொண்டனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி கொள்ளிடம் செம்பனார்கோயில் ஆகிய மையங்களில் நடந்தது. இதில் மாவட்ட தலைவர் எம்.செல்லப்பன், செயலாளர் பி.வீரராஜ் தலைமையில் சிபிஐ மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் மற்றும் மாவட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். தஞ்சை வடக்கு மாவட்டம் அம்மாபேட்டையில் மாவட்ட செயலாளர் சாமு. தர்மராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


தத்துவார்த்தம் 15




எஸ். தோதாத்ரி

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 3

வரலாற்றை இயக்கும் சக்திகள் இந்த உற்பத்தி உறவுகளும், உற்பத்தி சாதனங்களும்தான் என்று தனது "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு முன்னுரை" என்ற நூலின் ஆரம்பத்திலேயே கூறுகிறார். இது மார்க்சியத்தின் மிக முக்கியமான அம்சமாகும். இதனைப் புறக்கணித்துவிட்டு பேசப்படும் எதுவும் மார்க்சியம் ஆகாது.






மார்க்ஸ் மற்றொன்றையும் கூறுகிறார். இந்த அடிப்படைக்கு ஏற்ப சிந்தனைகள் தோன்றும் என்பது. இந்தச் சிந்தனையை கருத்துருவம் என்கிறோம். இந்தச் சிந்தனைகளின் தொகுப்பினைத்தான் மார்க்சியம் மேற்கட்டுமானம், மேற்கோப்பு என்ற பெயர்களால் அழைக்கிறது. இந்த மேற்கட்டுமானத்தை தீர்மானிப்பதே அடிப்படைதான் என்பது மார்க்சியம்.

"மனித இருப்பு அவனது பிரக்ஞையைத் தீர்மானிக்கிறது" "சமூக இருப்பு சமூகப் பிரக்ஞையைத் தீர்மானிக்கிறது" என்று மார்க்ஸ் கூறுகிறார். இது அடிப்படை, மேற்கோப்பு ஆகியவற்றிற்கு இடையிலான உறவைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல்கள் ஆகும்.

உலகாயத சித்தர் கூறுகிறார், "பொருளும் இருப்பும் இயற்கையும் முதன்மை – நாம் போற்றும் உணர்வெண்ணம் இரண்டாம் தன்மை"

இந்த அடிப்படையின் தன்மைக்கு ஏற்ப சிந்தனை வடிவங்கள் தோன்றுகின்றன. இந்த அடிப்படைதான் சிந்தனை அமைப்புகளை தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. இந்த சிந்தனை வடிவங்கள் யாவை? சட்டம், மதம், தத்துவம், கலை, இலக்கியம் போன்றவை இவை. இவை ஒவ்வொன்றும் அடிப்படையுடன் வெவ்வேறு விதமான உறவுகளைக் கொண்டவை. சில சிந்தனை அமைப்புகள் தோன்றிய காலத்தின் அடிப்படையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும். சமுதாயம் சிக்கலாக மாறும் பொழுது இதன் தன்மையும் மாறும். உதாரணமாக இசையை எடுத்துக்கொள்வோம். இது புராதன காலத்தில் உழைப்போடு தொடர்புடையது. உதாரணமாக குறிஞ்சி நிலத்தில் வசித்த குன்றக் குரவர்கள் விலங்குகளை விரட்டுவதற்கும், கலைத்து விடவும் பலத்த ஒளியுடன் ஆரவாரம் செய்ததை சங்க இலக்கியம் கூறுகிறது. வேட்டையில் நிறைய விலங்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக மான் போன்று தாவியும், புலி போன்று ஆடியும் நடனம் செய்தனர். இவை உழைப்போடு தொடர்பு உள்ளவை. இது அடிப்படையால் தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பூர்வீக உழைப்புச் செயல் மறைந்த பின்னர், வடிவம் மிஞ்சுகிறது. இது புதிய அமைப்பில் வளர்த்தெடுக்கப்பட்டு வடிவ உத்திகளாக மாறிவிடுகிறது அல்லது புதிய அமைப்பின் சிந்தனைகளை வெளிப்படுத்தும் சாதனமாக மறைகிறது. பார்ப்பதற்கு இது அடிப்படையை விட்டு விலகி, தன்னிச்சையாக செயல்படுவது போல் தோன்றலாம். ஆனால் உள்ளார்ந்து இது அடிப்படையால்தான் தீர்மானிக்கப்படுகிறது. இலக்கியத்தைப் பற்றி கேட்க வேண்டாம். சங்க இலக்கியத்தைத் தீர்மானித்தது இனக்குழு மக்களின் வாழ்க்கை முறை. பக்தி மார்க்க இலக்கியத்தை தீர்மானித்தது நிலவுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சி. இதிகாசங்களை தீர்மானித்தது பேரரசுகளின் எழுச்சி. இன்றைய புதுக் கவிதைக்கு பின்னால் இருப்பது பூர்சுவா தனிநபர் வாதமாகும்.

**அடிப்படையில் ஏற்படும் மாறுதல்கள் சட்டத்தில்தான் முதலில் பிரதிபலிக்கின்றன. புராதன சமுதாயத்தில் சட்டம் என்பது தனியாக இல்லை. அது சமுதாய நடைமுறையோடு சில பழக்கவழக்கங்களாகவே இருந்தது. ஆனால், சமுதாயம் வளரும் போது அதனை ஒழுங்குபடுத்த விதிமுறைகள் தேவைப்பட்டன.**

உதாரணமாக, இந்தியாவில் நிலவுடமை கெட்டிப்படுத்தப்பட்டு, அடிமைகள் உழைப்பு அதிகமான பொழுது கௌடில்யரது அர்த்த சாஸ்திரம் தோன்றுகிறது. சமுதாயத்தில் தொழில் பிரிவினை ஏற்பட்டு, அதன் காரணமாக நான்கு வர்ணங்கள் என்ற தொழில் பிரிவு ஏற்பட்ட பொழுது மனுநீதி தோன்றியது. தமிழகத்தில் முடியாட்சி வேகமாக வளர்ந்து வந்த பொழுது அதனை வெளிப்படுத்தும் முறையில் திருக்குறள் தோன்றியது. எனவே சட்டம் அடிப்படையான மாறுதல்களை உடனடியாக பிரதிபலிக்கும் ஒரு மேற்கட்டுமானம் ஆகும்.

இதே போன்றதுதான் தத்துவமாகும். தாய்வழிச் சமுதாயம் பொருள்முதல்வாதத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளது என்று தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா கூறுவார். அடிமை முறை நிலவுடைமை ஆகியன தோன்றிய பொழுது உலகம் மாயை என்ற கருத்துத் தோன்றியது.

இவ்வாறு அடிப்படையானது மேற்கோப்பினைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. அவ்வாறாயின் மேற்கட்டுமானம் செயலற்றதா? என்று கேட்கலாம். மேற்கட்டுமானம் செயல்திறன் உள்ளது. அது பலசமயங்களில் அடிப்படையின் வளர்ச்சியை விரைவுபடுத்தும். வேறு சில சமயங்களில் அடிப்படையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கும். உதாரணமாக, தமிழகத்தின் பண்டைய சங்ககால இனக்குழு அமைப்பு நிலவுடைமை அமைப்பாக மாறியது. இந்த அமைப்பு மாறாமல் இருக்கும் முறையில் இங்கு உள்ள தத்துவங்களும், இலக்கியங்களும் பல லட்சியங்களை முன்வைத்தன. இது வெள்ளையர்கள் வரவினால் குறைந்தது. இதனைத்தான் மார்க்ஸ் பரஸ்பர செயல் எனக் கூறுகிறார்.

அதாவது, அடிப்படை மேற்கட்டுமானத்தை தீர்மானிக்கிறது. மேற்கட்டுமானம் அதன்மீது செயல் புரிகிறது. ஆனால் இறுதியாகத் தீர்மானிப்பது அடிப்படை தான். இது தான் மார்க்சியம். இதனை விட்டுவிட்டு, இதில் ஏதேனும் ஒன்றை தனித்துக் கண்டால் அது திரிபுவாதம் ஆகும்.

தொடர்புக்கு: **98947 83657**

# ஜனவரி 31 - துரோக நாளாக ஐக்கிய விவசாயிகள் முன்னணி அனுசரிப்பு

**இந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளை துரோக நாளாக அனுசரிப்பது என ஐக்கிய விவசாயிகள் முன்னணி (சம்யுக்த கிசான் மோர்ச்சா) அறிவித்தது.**

இது குறித்து அகில இந்திய விவசாயிகள் சங்கம் மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு எழுதி யுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது பின் வருமாறு:

ஒன்றிய அரசின் 3 வேளாண் விரோத சட்டங்களைத் திரும்பப் பெற்றிடவும், பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டப்பூர்வ உத்தரவாதம் பெற்றிடவும், விவசாயிகள் விரோத கொள்கைகளை கைவிடுமாறும் வலியுறுத்தி ஐக்கிய விவசாயிகள் முன்னணி என்னும் பதாகையின் கீழ் விவசாயிகள் ஒன்று திரண்டு வரலாறு காணாத இயக்கத்தை நடத்தினார்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்தப் போராட்ட இயக்கத்தின் காரணமாக, 3 வேளாண் விரோத சட்டங்களும் திரும்பப் பெறப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, ஆறு முக்கியமான பிரச்சனைகள் பற்றி பிரதமரின் கவனத்தைக் கோரும் வகையில் 2021 நவம்பர் 21 அன்று சம்யுக்த கிசான் மோர்ச்சா சார்பில் பிரதமருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. இக்கடிதத்திற்கு பதிலளித்த வேளாண் துறை செயலாளர் திரு சஞ்சய் அகர்வால், சில பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்தின் சார்பாக வாக்குறுதி அளித்ததுடன், போராட்ட இயக்கத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து கடந்த டிசம்பர் 9 அன்று பதில் கடிதம் அனுப்பினார். அவர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் , டெல்லியின் எல்லைப்பகுதிகளில்



நடைபெற்று வந்த விவசாயிகள் போராட்டத்தைத் திரும்பப் பெற்றிட போராட்ட இயக்கத்தினர் முடிவு செய்தனர். ஒன்றிய அரசாங்கம் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்த நாட்டின் விவசாயிகள் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடனும் ஆவேசத்துடனும் தங்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே தான் , நாடு முழுவதிலும் உள்ள விவசாயிகள் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளை துரோக நாளாக கடைபிடிப்பது என்று முடிவு செய்துள் ளோம். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் துரோக தினம் கடைபிடிக்கப்பட்டது.

**சென்னை:** சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற துரோக தின ஆர்ப்பாட்டம் விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னை மாவட்ட அமைப்பாளர் மேரி லில்லிபாய் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க மாநில செயலாளர் அமிர்தலிங்கம், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் சீ.தினேஷ், தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபரம் மாவட்டச் செயலாளர் எல்.மேகனாதன், வி.ச. காஞ்சி மாவட் டச் செயலாளர் மூர்த்தி மற்றும் கே.போஸ், கே.வி. செங்கொடி செல்வன், சி.சுப்பிரமணி, எம்.பி. குமார், கே.குமரேசன், ஏ.ஆதாம், கே.பாபு, கோகிலா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் துரோக தினம் கடை பிடிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கே.நேரு, ஜே. கமலநாதன், எஸ்.வி.சங்கர், ஆர்.கோபி உள் ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

# சிவகாசியில் சிபிஐ மாநகராட்சி தேர்தல் தயாரிப்பு கூட்டம்



விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிவகாசி மாநகராட்சி தேர்தல் தயாரிப்பு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் க.சமுத்திரம் தலைமை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் ஆர் .ஜீவா ஆகியோர் பேசினர். 20க்கும் மேற்பட்ட தோழர்கள் பல்வேறு வார்டுகளில் போட்டியிட விருப்ப மனு அளித்தார்கள். திமுக நிர்வாகிகளிடம் பேசி வார்டுகளை இறுதி செய்வது என முடிவு செய்யப்பட்டது.



நீ.சு.பெருமாள்




# ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்

**இந்தியா எத்தகைய அரசியல் அமைப்பின்கீழ் பயணம் செய்ய இருக்கிறது என்பதை நிர்ணயிக்க 296 பேர் கொண்ட அரசியல் சாசன நிர்ணய சபை உருவாக்கப்பட்டது.**

பல வகையான விவாதங்கள் நடைபெற்றன. இதில் பேராசிரியர் கே.டி.ஷா அவர்களின் விவாதத்தில்தான் செக்யூலரிசம் (Secularism) என்ற வார்த்தைப் பிரயோகம் வருகிறது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் மக்களிடம் மேடை தோறும், அமையப் போகும் நமது இந்திய அரசாங்கம் சமயச் சார்பற்ற அரசாங்கமாக இருக்கும் எனப் பேசி வந்தோம். அதனை உறுதிப்படுத்த அரசியல் சாசனத்தில் செக்யூலர் என்ற வார்த்தையை சேர்ப்பதற்கு நாம் ஏன் தயங்க வேண்டும்? என்கிற கேள்வியை முன்வைக்கிறார்.

1947ல் நடந்த மதக்கலவரங்கள், அதற்கு முன்னரும், இந்தியாவில் மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் ஏற்பட்ட கலவரங்களை நினைத்து சமய சார்பற்ற தேசம் இந்தியா என்கிற வகையில் செக்யூலர் என்ற வார்த்தை அதன் முகப்புரையிலே (Preamble) வரவேண்டும் என கே.டி.ஷா வாதிடுகிறார்.

இதற்குப் பதிலளித்த அம்பேத்கர் மிகத்தெளிவான முறையில் ஒரு கருத்தை முன்வைக்கிறார். நம்முடைய அரசியல் அமைப்பு சாசன திறப்புரையில் இந்த சாசனம் ஒரு மெக்கானிசம் மட்டுமே எனக் குறிப்பிட்டுள்ளேன்.

அதனுடைய அர்த்தம் என்னவெனில் அரசு என்பது பல்வேறு இலாகாக்களை ஒன்றுபடுத்துகிற ஓர் எந்திரம். இந்த எந்திரம் ஒரு குறிப்பிட்ட கட்சியையோ அல்லது பல கட்சிகளையோ அதிகாரத்தில் அமர்த்துவதற்கானது அல்ல.

அரசாங்கத்தின் கொள்கை, இந்திய சமுதாயத்தை அது எப்படி நிர்வகிக்கிறது என்பதைக் காட்டுவதாக இருக்க வேண்டும். சமூகப் பொருளாதாரக் கொள்கை குறித்த கோட்பாடுகளை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இவை அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்படவில்லை. அப்படி அவை வரையறுக்கப்படுமானால் நமது ஜனநாயகத்தை அவை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும் என எச்சரிக்கிறேன் என்றார் அம்பேத்கர்.

செக்யூலரிசம் என்ற வார்த்தையை அரசியல் சாசன முகப்புரையில் சேர்க்க வேண்டும் என்பது தேவையில்லாதது. பேராசிரியர் கே.டி.ஷா அரசியல் சாசனத்தில் கண்டு கொள்ளாமல் விட்ட இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவு அடிப்படை உரிமைகள் பற்றி பேசுகிறது.

இன்னொரு பிரிவு வழிகாட்டு நெறிமுறைகள். எழுதுவதற்கு, பேசுவதற்கு, விரும்பிய மதக் கோட்பாட்டைப் பின்பற்றுவதற்கு அடிப்படை உரிமையில் முழு சுதந்திரம் உண்டு. எனவே கே.டி.ஷாவின் செக்யூலரிசம் தீர்மானம் அவசியமற்றது என்றும் குறிப்பிட்டார் அம்பேத்கர்.

ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவ தேவாலயங்களுக்கும், அரசுகளுக்கும் மோதல் நீடித்து வந்தது. அந்தச் சூழலில்தான் தேவாலயங்கள் அரசுக் கொள்கைகளில் தலையிடுவது கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட கோட்பாடுதான் செக்யூலரிசம் !.

இந்தியாவில் மத போதகர்களால் ஆட்சி நிர்வாகம் நடைபெற்றதில்லை. மாறாக கோயில், பூசாரிகள் என அனைவரும் மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்தனர். அரசாங்கத்திற்கு நிகராக வரி வசூல் மத போதகர்களால் வசூலிக்கப்பட்ட வரலாறு கிடையாது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் தேவாலய பாதிரியார்கள் மன்னருக்கு நிகராக வரி வசூல் செய்தனர். அதனால் தான் செக்யூலரிசம் அங்கு தேவையாக இருந்தது.

சமயச் சார்பற்ற அரசு என்பது அரசாங்கத்திற்கு மட்டுமே.. மக்களுக்கு அல்ல ! மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அல்ல என்பதை முதல் பிரதமராக இருந்த நேரு காலத்திலேயே நிறுவப்பட்டது.

1951 ஆம் ஆண்டில் குஜராத்தில் உள்ள சோமநாதர் ஆலய குடமுழுக்கு நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் யாரும் பங்கேற்கக் கூடாது என நேரு அறிக்கைவிட்டார். ஆனாலும் அதனை புறந்தள்ளி டாக்டர் ராஜேந்திரபிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர் !

மன்மோகன்சிங் பிரதமராக இருந்த 15வது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாக்களில் 68 மசோதாக்கள் நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. 16வது மக்களவையின் பிரதமர் நரேந்திரமோடி. மொத்தம் ஐந்து அண்டுகளில் 24 மசோதாக்கள் மட்டுமே நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

தற்போதைய 17வது மக்களவையில் அதே மோடிதான் பிரதமர். ஆனால் எந்த ஒரு மசோதாக்களும் நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கும் பேச்சுக்கு இடமில்லை !.

இதற்கு முன்னர் பாஜகவின் பிரதமராக இருந்தவர் வாஜ்பாய். இவர் பதவி வகித்த ஆறு வருடக் காலங்களில் 77 முறை நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பேசியுள்ளார்.

பத்து வருடம் பிரதமராக இருந்த மன்மோகன்சிங் 48 முறை நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பேசியுள்ளார். ஆனால் நாவன்மை மிக்க நரேந்திரமோடி என்கிற தோற்றப்பொலிவு கொண்ட இன்றைய பிரதமர் ஏழு வருடங்களில் 22 முறை மட்டுமே பேசியுள்ளார். மன்மோகன்சிங் ஆட்சியில் ஆண்டுக்கு சராசரியாக ஆறு அவசர சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. தற்போதைய பிரதமர் மோடியின் 7 வருட ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 11 அவசர சட்டங்கள் பிறப்பிக்கப் படுகின்றன.

இத்தனைக்கும் ஜனநாயகத்தின் கோயில் நம்முடைய நாடாளுமன்றம் எனச் சொல்லி நாடாளுமன்ற வாசலை முதல் நாளில் தொட்டுக் கும்பிட்டு உள்ளே சென்றவர்தான் மோடி.

15.03.1947ல் அரசியல் சாசன சபைக்கு அம்பேத்கர் ஒரு மனுவை வழங்குகிறார். அதில் சோசலிசக் குடியரசை அரசியல் சாசன சட்டத்தின் மூலம் அமல்படுத்த வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தி இருந்தார்.

இந்து மதத்தில் உள்ள சாதித் தீண்டாமையை முழுவதுமாக அகற்ற முடியாது. அதனால் சுதந்திர இந்தியாவில் அதனை ஒழிப்பதற்கான வழிமுறைகளைக் கடைபிடிக்க முயற்சி செய்தார். காங்கிரசில் நிரம்பியிருந்த உயர்சாதி மற்றும் பிராமணர்கள் அந்த முயற்சியை நீர்த்துப் போகச் செய்தனர்.

அம்பேத்கர் மனதில் சோசலிசச் சார்பு (Socialism Model) இடம் பெற்றது. அதனை அவர் அரசியல் சாசனத்தில் பிரயோகிக்க விரும்பினார். ஐரோப்பிய சார்பு பொருளாதாரம் இந்தியாவுக்குப் பொருத்தமானதல்ல. குறிப்பாக தலித்துகளை முன்னேற்றுவதற்கு சரியாக இருக்காது. இந்த ரகப் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரம் என்ற நிலையில் அம்பேத்கர் கருதினார்.

அரசியல் சாசனம் அம்பேத்கரால் தயாரிக்கப்பட்டது என போகிற போக்கில் சொல்வோர் உண்டு. சோசலிசத்தை விரும்பிய அவரால் சோசலிச சட்டங்களை இயற்ற முடியவில்லை. ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையாக சொத்துரிமை அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது.

சொத்துரிமை என்பது வெறும் நில உடமை மட்டும் அல்லஞ் வர்ணாசிரம முறைகளையும் சேர்த்து பாதுகாக்கும் வகையில் அரசியல் சாசனம் பேசுகிறது. தேவைப்படுகிற தனியார் சொத்துடைமைகளை அரசு கையகப்படுத்த வேண்டுமானால் அதற்கு அரசு நஷ்டஈடு வழங்கித்தான் பெற வேண்டும் என்கிறது நம் அரசியல் அமைப்புச் சட்டம் !

தனியார் சொத்துக்கு நட்டஈடு வழங்கக் கூடாது என வாதிட்டு தோற்றவர் அம்பேத்கர். அரசியல் சாசன உறுப்பினர்களில் 99 சதவீதம் பேர் நிலக்கிழார்களாகவே இருந்தனர். தம்முடைய நிலத்தை அரசு கையகப்படுத்த விடுவார்களா?.

இந்த முதலாளித்துவ ஜனநாயகம் இன்று செழிப்புற வளர்ந்துள்ளது. பொதுத்துறையான BSNL விற்கப்படுகிறது. தனியார் தொலைதொடர்பு நிறுவனங்கள் அரசின் உதவியோடு வளர்க்கப்படுகிறது. ரயில்வே பாதைகள் தனியார் கரங்களுக்குச் செல்கிறது. அம்பேத்கர் காலத்தில் தனியாரிடம் இருந்த விமானப் போக்குவரத்து மீண்டும் தனியார் வசமே சென்றுவிட்டது ! அதிகாரபூர்வமாக ஆட்சி செய்வதுதான் நம்மவர்கள் (இந்தியர்கள்) பன்னாட்டு நிறுவனங்களிடம் வணிகம் என்கிற பெயரில் மாயப் பொன்விலங்கை கையிலும் காலிலும் மாட்டிக் கொண்டு மூவர்ணக் கொடிக்கு போலியாக வணக்கம் செய்கிறோம்.

**நினைவில் கொள்ளுங்கள்... பாஜகவுக்கு இன்றைய நாடாளுமன்றத்தில் 303 உறுப்பினர்கள். இந்தியா முழுவதும் பதிவான வாக்குகளில் பாஜக பெற்றது 37 சதவீத வாக்குகள் மட்டும்தான்! 63 சதவீத மக்களின் விருப்பமில்லா ஆட்சிதான் தற்போது தொடர்கிறது.**

காங்கிரஸ் பெற்ற வாக்குகள் என்பது 19 சதவீதம். அதாவது பாஜக பெற்ற வாக்குகளில் 50 சதவீத வாக்குகளை காங்கிரஸ் கட்சி பெற்றுள்ளது. பாஜகவுக்கு 303 இடங்கள் என்றால் காங்கிரஸ் கட்சிக்கு 151 இடங்கள் இருக்க வேண்டும். அதுதான் மக்கள் வழங்கிய தீர்ப்பு.

உண்மையில் ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் எனில், எல்லா அரசியல் கட்சிகளும் விகிதாச்சார தேர்தல் முறைக்கு மாற ஆலோசிக்க வேண்டும். அதனை முன்னெடுப்பதுதான் 75 வது ஆண்டு சுதந்திர விழா காண இருக்கும் இந்தியாவுக்கும்ஞ் அம்பேத்கர் உருவாக்கித் தந்த அரசியல் அமைப்பு சட்டத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும்.

தொடர்புக்கு: 94426 78721


## முத்துக்குமார் 13 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

தமிழீழப் போராட்டத்தில் தீக்குளித்து தியாகியான முத்துக்குமார் 13வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சாவூர் ரயிலடி முன்பு, இடதுசாரிகள் பொதுமேடைசார்பாக நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மக்கள் அதிகாரம் தேவா, அருள் உள்ளிட்டோர் முத்துக்குமாரை நினைவு கூர்ந்து பேசினர்.

## கோவையில் 5வது தென்னிந்திய அளவிலான கராத்தே போட்டி

தென்னிந்திய அளவிலான மாபெரும் கராத்தே போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி கோவையில் நடைபெற்றது. எம்ஸ்டு மார்ஷியல் ஆர்ட்ஸ் அமைப்பின் சார்பில் நடத்தப் பட்ட இந்தப் போட்டிகளில் மாநிலம் முழுவதும் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்களும் 50க்கும் மேற்பட்ட கராத்தே ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிகளுக்கு கோவை மாவட்ட கராத்தே சங்க தலைவர் மாஸ்டர் Renshi பா.விஜயகுமார் தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் வாழ்த்துரை வழங்கியும், மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வே. ஈஸ்வரன் ஊக்க உரை நிகழ்த்தினார்.



# சங்கே முழங்கு!





## தோழர் ஆர்யா (எ) பாஷ்யம்

# வீர வணக்கம்

**1932 ஆண்டு ஜனவரி 25 நல்லிரவு சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஸ் ராணுவத்தின் கடும் பாதுகாப்பையும் மீறி கோட்டைக்குள் நுழைகிறார்அந்த இளைஞர், கோட்டையின் வடக்குப் பக்கத்தில் உள்ள வயர்லெஸ் நிலையத்திலிருந்து 200 அடி உயர கொடிக்கம்பத்தில் ஏறுகிறார்.**

கலங்கரை விளக்கத்தின் வெளிச்சம் படும்போது கம்பத்தோடு ஒட்டிக் கொள்கிறார்,இப்படிப் போராடிப் போராடி கம்பத்தின் உச்சிக்குச் சென்னீறு, பிரிட்டிஷாரின் கொடியை அகற்றி, மூவண்ணக் கொடியை ஏற்றுகிறார்.

கோட்டையில் பாதுகாப்பிற்கு ராணுவம் அங்கே இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் கொடி கம்பத்தில் இருந்து இறங்கி வருகிறார் அந்த இளைஞர். ஜனவரி 26ஆம் தேதி காலையில் கோட்டையில் மூவண்ணக் கொடி பரப்பதை பார்த்து பிரிட்டிஷ் ராணுவம் அதிர்ச்சியடைகிறது.

நகரம் முழுவதும் பெரும் பரபரப்பு கோட்டையில் பறக்கும் மூவண்ண கொடியை காண பெரும் கூட்டம் அலை மோதின பிரிட்டிஷ் ராணுவத்திற்கு கண்ணாமூச்சி காட்டி நள்ளிரவில் கொடியேற்றி விட்டு வந்த அந்த வீர இளைஞர் பெயர் ஆர்யா (எ) பாஷ்யம் அவரது வயதோ அன்று 25.



இந்திய நாட்டின் விடுதலை புரட்சிக்கு பணம் தேவைப் பட்டது மதுரையில் இருந்த இம்பீரியல் வங்கியில் இருந்து சுப்பையா வாங்கிக்கு பணம் எடுத்து செல்லும் போது கொள்ளையடிக்க திட்டம் தீட்டினார்கள் போலீசிடம் மாட்டிக் கொண்டனர் திருட்டில் ஈடுப்பட்ட நண்பர்கள் பாஷ்யம் பெயரை சொல்லி விட்டனர்.போலிஸ் கைது செய்தது நீதிமன்றத்தில் குற்றங்கள் நிரு பிக்க முடியாமல் நீதிமன்றம் பாஷ்யத்தை விடுதலை செய்தது. துப்பாக்கிகளை கடத்தினார். ரயில் தண்டவாளங்களை தகர்த்தார். பாலங்களை வெடி வைத்து தகர்த்தார். துப்பாக்கி ஏந்திய கரங்களில். தூரிகை ஏந்தினார் சிறந்த ஓவியர். வ.உ.சி. மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், கஸ்தூரிபாய் காந்தி போன்ற ஏராளமான தலைவர்களின் படங்களை வரைந்தவர். இன்று நாம் காணும் முன்டாசு மகாகவி பாரதியின் படம் ஆரியா (எ) பாஷ்யம் வரைந்தது. காந்திஜியின் படமும் அவர் வடித்த உருவச் சிலையும் உலகப்புகழ் பெற்றவை.

கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் அமீர் ஹைதர்கான், சி.எஸ்.சுப்பிரமணியம், புதுச்சேரி விடுதலை வீரர் வ.சுப்பையா இவர்களோடு தொடர்பும் நட்புகொண்டார்.

புரட்சியாளரானாக, காந்தியவாதியாக நாட்டின் விடுதை போரில் தமது 11வது வயதிலேயே தன்னை அர்ப்பணித்து கொண்ட கே.பாஷ்யம் (எ) ஆரியா சுந்திர போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை கடைசி வரை வாங்க மறுத்தார். சுதந்திர தின குடியரசு தின நாட்களில் சிறப்பு செய்வதையும் ஏற்காமல் மறுத்தார்.

1907 பிறந்து 05.03.1999ல் தமது 93 வயதில் இறந்தார். இறப்புக்கு பிறகே உடலுக்கு அரசு மறியதை செலுத்தியது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஒன்றியம் சேரங்குளம் கிராமத்தில் பிறந்த அந்த புரட்சியாளனுக்கு 73 வது குடியரசு நாளில் வீர வணக்கம் செய்வோம்.

**– அ.பாஸ்கர்** தொடர்புக்கு: **94884 88339**



# கலெக்டர் ஏன் மேக்கப் போடவில்லை...?

**மலப்புரம் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீமதி. ராணி சோயாமோய், கல்லூரி மாணவர்களுடன் உரையாடுகிறார்.**

கைக்கடிகாரத்தைத் தவிர வேறு எந்த நகையும் அணியவில்லை.

பெரும்பாலான குழந்தைகளை ஆச்சர்யப்படுத்திய விஷயம் என்னவென்றால், அவள் முகத்தில் பவுடர் கூட பயன்படுத்தவில்லை.

பேச்சு ஆங்கிலத்தில் உள்ளது. அவள் ஓரிரு நிமிடங்கள் மட்டுமே பேசினாள், ஆனால் அவளுடைய வார்த்தைகள் உறுதியுடன் இருந்தன.

அப்போது குழந்தைகள் கலெக்டரிடம் சில கேள்விகளை கேட்டனர்.

கே: உங்கள் பெயர் என்ன?

என் பெயர் ராணி. சோயாமோய் என்பது எனது குடும்பப் பெயர். நான் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவள்.

வேறு ஏதாவது கேட்க வேண்டுமா?

பார்வையாளர்களிடமிருந்து ஒரு மெல்லிய பெண் எழுந்து நின்றாள்.

கேள், குழந்தை.....

“மேடம், ஏன் முகத்துக்கு மேக்கப் போடக்கூடாது?”

கலெக்டரின் முகம் சட்டென்று வெளிறியது. அவரது நெற்றியில் வியர்வை வழிந்தது. அவள் முகத்தில் புன்னகை மறைந்தது. பார்வையாளர்கள் திடீரென அமைதியானார்கள்.

மேஜை மேல் இருந்த தண்ணீர் பாட்டிலை திறந்து கொஞ்சம் குடித்தாள். பிறகு குழந்தையை உட்காருமாறு சைகை செய்தாள். பிறகு மெதுவாக பேச ஆரம்பித்தாள்.

குழந்தை குழப்பமான கேள்வியைக் கேட்டது. இது ஒரு வார்த்தையில் பதில் சொல்ல முடியாத ஒன்று. அதற்குப் பதில் என் வாழ்க்கைக் கதையைச் சொல்ல வேண்டும். என்னுடைய கதைக்காக உங்கள் பொன்னான பத்து நிமிடங்களை ஒதுக்க நீங்கள் தயாராக இருந்தால் எனக்கு தெரியப்படுத்துங்கள்.

தயார்...

நான் ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினர் பகுதியில் பிறந்தேன்.

கலெக்டர் சற்று நிதானித்து பார்வையாளர்களை பார்த்தார்.

“மைக்கா” சுரங்கங்கள் நிறைந்த கோடெர்மா மாவட்டத்தின் பழங்குடியினர் பகுதியில் ஒரு சிறிய குடிசையில் பிறந்தேன்.

என் அப்பாவும் அம்மாவும் சுரங்கத் தொழிலாளர்கள். எனக்கு மேலே இரண்டு சகோதரர்களும், கீழே ஒரு சகோதரியும் இருந்தனர். மழை பெய்தால் கசியும் ஒரு சிறிய குடிசையில் நாங்கள் வாழ்ந்தோம்.

வேறு வேலை கிடைக்காததால் எனது பெற்றோர் சொற்ப கூலிக்கு சுரங்கத்தில் வேலை செய்தனர். இது மிகவும் குழப்பமான வேலையாக இருந்தது.

எனக்கு நான்கு வயதாக இருக்கும் போது, என் அப்பா, அம்மா மற்றும் இரண்டு சகோதரர்கள் பல்வேறு நோய்களால் படுத்த படுக்கையாக இருந்தனர்.

சுரங்கங்களில் உள்ள கொடிய மைக்கா தூசியை சுவாசிப்பதால் இந்த நோய் ஏற்படுகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது.

எனக்கு ஐந்து வயதாக இருந்தபோது, என் சகோதரர்கள் நோயால் இறந்துவிட்டனர்.

ஒரு சிறு பெருமூச்சுடன் கலெக்டர் பேச்சை நிறுத்திவிட்டு கண்ணீரை துடைத்தார்.

பெரும்பாலான நாட்களில் எங்கள் உணவில் தண்ணீர் மற்றும் ஒன்று அல்லது இரண்டு ரொட்டிகள் இருந்தன. எனது சகோதரர்கள் இருவரும் கடுமையான நோய் மற்றும் பட்டினியால் இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டனர். என் கிராமத்தில் பள்ளிக்கூடம் இல்லை. பள்ளிக்கூடம், மருத்துவமனை அல்லது கழிவறை கூட இல்லாத கிராமத்தை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

ஒரு நாள் நான் பசியுடன் இருந்தபோது, என் தந்தை என்னை, இரும்புத் தாள்களால் மூடப்பட்ட ஒரு பெரிய சுரங்கத்திற்கு இழுத்துச் சென்றார்.

அது புகழ் பெற்ற மைக்கா சுரங்கம்.

இது ஒரு பழங்கால சுரங்கம். கீழே உள்ள சிறிய குகைகள் வழியாக ஊர்ந்து சென்று மைக்கா தாதுக்களை சேகரிப்பது எனது வேலை. பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே இது சாத்தியமாக இருந்தது.

என் வாழ்நாளில் முதல்முறையாக ரொட்டி சாப்பிட்டு வயிறு நிரம்பினேன். ஆனால் அன்று நான் வாந்தி எடுத்தேன்.

நான் ஒன்றாம் வகுப்பு படிக்கும் போது, நான் விஷ தூசியை சுவாசிக்கக்கூடிய இருட்டு அறைகளில் மைக்காவை முகர்ந்து கொண்டிருந்தேன்.

துரதிர்ஷ்டவசமான குழந்தைகள் அவ்வப்போது நிலச்சரிவுகளில் இறப்பது வழக்கமல்ல.

ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் உழைத்தால் ஒரு ரொட்டியாவது கிடைக்கும். பசி மற்றும் பட்டினியால் நான் ஒவ்வொரு நாளும் மெலிந்து நீரிழப்புடன் இருந்தேன்.

ஒரு வருடம் கழித்து என் சகோதரியும் சுரங்கத்தில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். கொஞ்சம் நல்லா வந்தவுடனே அப்பா, அம்மா, அக்கா மூவரும் சேர்ந்து உழைத்து பசியில்லாமல் வாழலாம் என்ற நிலைக்கு வந்தோம்.

ஆனால் விதி வேறொரு வடிவில் நம்மை ஆட்கொள்ளத் தொடங்கியது. ஒரு நாள் கடும் காய்ச்சலால் வேலைக்குப் போகாமல் இருந்தபோது திடீரென மழை பெய்தது. சுரங்கத்தின் அடிவாரத்தில் தொழிலாளர்கள் முன்னிலையில் சுரங்கம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர். அவர்களில் என் அப்பா, அம்மா மற்றும் சகோதரி ஆகியோரும் இருந்தனர்.

அனைவரின் கண்களிலும் கண்ணீர் வழியத் தொடங்கியது. பார்வையாளர்கள் அனைவரும் மூச்சு விடக்கூட மறந்தனர். பலரது கண்களும் கண்ணீரால் நிரம்பி வழிந்தது.

எனக்கு ஆறு வயதுதான் இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இறுதியில் அரசு அகத்தி மந்திர் வந்தடைந்தேன். அங்கு நான் படித்தேன். என் கிராமத்தில் இருந்து முதலில் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டவள் நான். இறுதியாக இதோ உங்கள் முன் கலெக்டர்.

இதற்கும் நான் மேக்கப் பயன்படுத்தாததற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நினைக்கலாம்.

பார்வையாளர்கள் வழியாகப் பார்த்துக்கொண்டே அவள் தொடர்ந்தாள்.

அந்த நாட்களில் இருளில் ஊர்ந்து நான் சேகரித்த மைக்கா முழுவதையும் ஒப்பனை பொருட்களில் பயன்படுத்துவதை அப்போதுதான் உணர்ந்தேன்.

மைக்கா என்பது ஃப்ளோரசன்ட் சிலிக்கேட் கனிமத்தின் முதல் வகை.

**பல பெரிய அழகுசாதன நிறுவனங்கள் வழங்கும் மினரல் மேக்கப்களில், 20,000 இளம் குழந்தைகளின் உயிரைப் பணயம் வைத்து உங்கள் சருமத்தை ஒளிரச் செய்யும் பல வண்ண மைக்காக்கள் மிகவும் வண்ணமயமானவை. ரோஜாவின் மென்மை உங்கள் கன்னங்களில் பரவுகிறது, அவற்றின் எரிந்த கனவுகள், அவர்களின் சிதைந்த வாழ்க்கை மற்றும் பாறைகளுக்கு இடையில் நசுக்கப்பட்ட அவர்களின் சதை மற்றும் இரத்தம். மில்லியன் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள மைக்கா இன்னும் சுரங்கங்களில் இருந்து குழந்தை கைகளால் எடுக்கப்படுகிறது. நம் அழகை அதிகரிக்க... இப்போது நீங்கள் சொல்லுங்கள்.**

நான் முகத்தில் எப்படி மேக்கப் போடுவது?. பட்டினியால் இறந்த என் சகோதரர்களின் நினைவாக நான் எப்படி வயிறு நிரம்ப சாப்பிட முடியும்? எப்பொழுதும் கிழிந்த ஆடைகளை அணிந்திருக்கும் என் அம்மாவின் நினைவாக நான் எப்படி விலை உயர்ந்த பட்டு ஆடைகளை அணிவது?.

வாய் திறக்காமல் தலையை உயர்த்தி, சிறு புன்னகையுடன் அவள் வெளியே சென்றபோது பார்வையாளர்கள் அனைவரும் அறியாமல் எழுந்து நின்றனர். அவர்கள் முகத்தில் இருந்த மேக்கப் அவர்கள் கண்களில் இருந்து வழியும் சூடான கண்ணீரில் நனைய ஆரம்பித்தது.

– ஒரு முகநூல் பதிவு

NFIW

**பணியிடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திடும் வகையில் உள்ளக மற்றும் உள்ளூர் புகார் குழு செயல்படுத்தப்படும்;**

குற்றச் சம்பவம் குறித்து தகவல் பெற்றவுடன் 24 மணி நேரத்திற்குள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதை உறுதி செய்யப்படும்; பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த மகளிர், கொத்தடிமைகளான பெண்கள், மாற்றுத்திறனாளி பெண்கள், அமைப்புசாரா தொழில் செய்யும் மகளிர் ஆகியோருக்கு இக்கொள்கை சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தப்படும்;

பெண்ணடிமை கருத்துக்களை அகற்றுவதற்கு ஏற்ற வகையில் அனைத்து கல்வி நிலையங்களிலும் பாடத்திட்டம் வடிவமைக்கப்படும்; உயர்கல்வி படிக்க ஊக்கத்தொகை, பெண்கள் வேலை செய்யும் இடங்களில் நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் வழங்குதல், பெண் தலைமையிலான குடும்பங்களுக்கு **MNREGS** கீழ் 50 வேலை நாட்கள் கூடுதல் வேலை, தனி பெண்கள் தனி குடும்பமாக கருதப்பட்டு குடும்ப அட்டை தரப்படும்;

பெண்களின் பாதுகாப்பிற்கான சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்; புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த, மாநில சட்ட ஆணையத்தின் மூலம் மாநில அரசு அவ்வப்போது சட்ட மறுஆய்வு மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்; பெண்கள் இரவு பணி செய்வதற்கான பாதுகாப்பு போக்குவரத்து ஆகியவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்; பெண் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் சிறுவனப் பொருட்களையும் விறகுகளையும் பயன்படுத்த அனுமதி;

பெண் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களில் 50சதம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகளில் விநியோகம் செய்ய பயன்படுத்த கொள்முதல் செய்யப்படும்; இயற்கை விவசாயத்தை மேம்படுத்த பயிற்சி கள்; நவீனமயமாக்கப்பட்ட மின்சேமிப்பு பெட்டிகள், சூரிய ஒளி மின்உலர்த்திகள் ஆகிய உணவுபதப்படுத்தும் தொழில் நுட்பத்தை பெண்விவசாயிகள் மற்றும் மீனவத் தொழிலில் உள்ள மகளிருக்கு வழங்கி அவர்களின் பணிசுமையை குறைக்கப்படும். இவை உட்பட பெண்களின் மேம்பாட்டிற்காக புதிய கொள்கை வரைவு முன்மொழிந்துள்ள பல சிறப்பான அம்சங்களை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வரவேற்கிறது.

அதேசமயத்தில், பெண்களின் மேம்பாட்டிற்கான சில அடிப்படை அம்சங்களை இந்த புதிய கொள்கையில் இணைத்து கொள்ள வேண்டும் என இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கருதுகிறது. அதற்கான எங்கள் அமைப்பின் ஆலோசனைகள்:

1. ஆதரவற்ற இளம் கைம்பெண்கள் உதவித் தொகை மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதற்காக ஏற்கனவே உள்ள விதிமுறைகள் எளிமையாக்கப்பட வேண்டும். கணவர் இறந்து 6மாத காலத்திற்குள் அந்த பெண்ணிற்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கணவர் இறந்த மறுநாளில் இருந்தே உதவித் தொகை கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.
2. பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிக்கவும், இடைநிற்றலை தடுக்கவும் அனைத்து கிராமப்புற மற்றும் தாலுகாக்களில் அருகாமை அரசு பள்ளிகள் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். தாலுகாவாரியாக 18வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டு அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவு துவக்க பள்ளி முதல் மேல்நிலை வரை அரசு பள்ளிகளை உருவாக்க வேண்டும். பெண்களுக்கு அரசு வேலைவாய்ப்பிற்கான ஆசிரியர் பணியில் அதிக இடங்களை உருவாக்குவது பெண்களுக்கான வேலைவாய்ப்பாகவும் அதேசமயத்தில் பெண் குழந்தைகள் கல்விகற்பதற்கான வாய்ப்பாகவும் அமையும்.
3. இணைய வசதி அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு செய்து தரப்பட வேண்டும். கொரானா காலத்தில் ஆன்லைன் வகுப்புகள் அதிகம் நடைபெறுவதால், அனைத்து அரசு பள்ளி மாணவர்களுக்கும் கைபேசி தருதல் மற்றும் இணைய வசதி பெறுவதற்கான பணஉதவி செய்யப்பட வேண்டும்.
4. பாலியல் குறித்து தவறான புரிதல்களை தரக்கூடிய தரவுகள் கொட்டி கிடக்கும் இன்றைய இணைய உலகில் மாணவர்கள் பாலியல் குறித்த சரியான புரிதலை பெறுவதற்கு பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி சேர்க்கப்பட வேண்டும்.
5. அனைத்து பொது இடங்களிலும் பெண்களுக்கு உகந்த கழிப்பறைகளில் தண்ணீர் வசதி மற்றும் சுகாதாரத்துடன் வைத்திருப்பதற்கு போதுமான ஊழியர்கள் நியமித்து பராமரிக்கப்பட வேண்டும்.
6. ஊட்டச்சத்து குறைபாடு உள்ள பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அதிக ஊட்டச்சத்து கிடைத்திட வரைவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களுடன் பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகிய புரதச் சத்து நிறைந்த பொருட்கள் கிடைப்பதற்கும் வழிவகைகள் செய்ய வேண்டும். குறிப்பாக பெண்களின் கர்ப்ப காலத்தில் ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலமே அந்த ஊட்டச் சத்து உணவினை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
7. குடிப்பழக்கத்தை பொருத்தவரை அதற்கு ஆளானவர் குடிநோயாளிகளாக மாறுவதோடு, குழந்தைகளின் மனநலம், குடும்பத்தின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு மற்றும் பல குற்றங்களுக்கு குடிபழக்கம் காரணமாக அமைகிறது. எனவே தமிழக அரசு குறிப்பிட்ட காலம் நிர்ணயித்து படிபடியான மதுவிலக்கை அமல்படுத்தி, அடுத்த தலைமுறையாவது இந்த கொடிய பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுக்கும் வகையில் பூரண மதுவிலக்கை கொண்டு வருவதை கொள்கையாக அறிவிக்க வேண்டும்.
8. பள்ளி மாணவர்களிடையே போதை பழக்கம் அதிகரித்து வருவதை கணக்கில் கொண்டு அனைத்து வகையான போதை பொருட்களும் தடை செய்யப்பட வேண்டும்.
9. **MGNREGS** வேலைநாட்கள் 200 நாட்களாக உயர்த்தப்பட வேண்டும். இத்திட்டம் ஒன்றிய அரசின் திட்டமாக இருப்பினும் கேரளா மாநிலத்தில் இத்திட்டம் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விவசாய வேலை இல்லா காலங்களில் வேலையின்றி சிரமப்படும் கிராமப்புற பெண்களின் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை பேரூராட்சிகளுக்கும் தமிழக அரசு அவசியம் விரிவுபடுத்த வேண்டும்.
10. இளம் பெண்கள் வெளிமாவட்டங்களுக்கு சென்று பணி புரிவது அதிகரித்து வருகிறது. எனவே அவர்கள் பாதுகாப்பாக தங்கி பணிபுரியும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் போதுமான தங்கும் விடுதிகளை தமிழக அரசு ஏற்படுத்தி தர வேண்டும்.




11. மகளிர் காவல் குழு, மகளிர் காவல் தன்னார்வலர், போதை ஒழிப்பு திட்ட அமர்வுகள், பாலின மன்றங்கள் அனைத்திலும் பெண்களின் உரிமைக்காக, பாதுகாப்பிற்காக செயல்பட்டு

## லிங்கா ரெட்டிபாளையம்

# கூட்டுறவு சர்க்கரை ஆலையை திறக்க கோரி ஆர்ப்பாட்டம்



புதுச்சேரி விவசாயிகள் சங்க மாநில குழு கூட்டம் விவசாயிகள் சங்க தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் து.கீதநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு தலைவர் எம்.மாசிலாமணி, துணை பொதுச்செயலாளர் து.ராஜா, செயலாளர் அ.பெருமாள், மாநிலக்குழு உறுப்பினர்கள் கொம்பாக்கம் ஆர்.பெருமாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி அரசு லிங்கா ரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை திறக்க கோரியும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க வலியுறுத்தியும் பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி அன்று காலை 10 மணி அளவில் காட்டேரிகுப்பத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

**வரலாறு என்பது ஈவு இரக்கமற்ற முரண்பாடுகளின், மோதல்களின் இயக்கப்போக்காகும். துன்ப துயரங்கள், சோதனைகளை கடந்துதான் வரலாற்றில் முன்னேற்றம் சாதிக்கப்படுகிறது.**
**– ஏங்கல்ஸ்**

## பெகாசஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம்

# பினாய் விஸ்வம் எம்.பி. உரிமை மீறல் தீர்மானம்



இந்தியா உள்பட உலகம் முழுவதும் பல்வேறு பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வ லர்கள் ஆகியோரது தொலைபேசிகள் பெகாசஸ் உளவு மென்பொருளால் ஹேக் செய்யப்பட்டு ஒட்டுக் கேட்கப் பட்டதாக பெரும் சர்ச்சை வெடித்தது. இந்தியாவில் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்திய உச்சநீதிமன்றம், பெகாசஸ் விவகாரத்தை விசாரிக்க ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து, 8 வாரங் களில் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. இந்நிலையில் பிரபல அமெரிக்க ஊடகமான நியூயார்க் டைம்ஸ், பெகாசஸ் மென்பொருளை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் வாங்கியது குறித்து புலனாய்வு கட்டுரையை வெளியிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பெகாசஸ் விவகாரம் மீண்டும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

இந்நிலையில் ஜன.31 அன்று நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியது. அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி.யான பினாய் விஸ்வம், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மீது மாநிலங்களவையில் உரிமை மீறல் தீர்மானம் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானம் தொடர்பான நோட்டீஸை மாநிலங்களவைத் தலைவரிடம் அவர் வழங்கினார்.




வரும் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் கட்டாயம் இருக்கும்படியாக விதிமுறைகள் அமைக்கப்பட வேண்டும்.

12. பெண்கள் பிரச்சனையில் ஆணாதிக்க தன்மையோடு காவலர்கள் நடப்பதை தடுக்க, பெண்களின் உரிமைகளை புரிந்துக் கொள்ள பெண் காவலர்கள் உட்பட அனைத்து காவலர்களுக்கும் பாலின சமத்துவ கல்வி பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

13. தாங்கள் காதலிக்கும் ஆணை திருமணம் செய்யும் இளம் பெண்களையும், அவர்களது கணவரையும் குடும்பங்களே கொலை செய்யும் நிகழ்வுகள் தமிழகத்தில் அதிகரித்துள்ளன. பெண்கள் தாங்கள் விரும்பியவரை தேர்வு செய்து மணக்கும் உரிமையை பாதுகாத்து தருவது அரசின் கடமை. எனவே சாதி ஆணவ படுகொலைகளை தடுப்பதற்கான சிறப்பு சட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றி பெண்களின் உரிமையை, உயிரை பாதுகாக்க வேண்டும். சாதிமறுப்பு திருமணம் செய்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் குறிப்பிட்ட சதம் இடஒதுக்கீடு செய்ய வேண்டும்.

14. சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலில் பெண்களின் பங்கேற்பை உறுதி செய்ய நாடாளுமன்றத்தில் 25 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் மசோதா மக்களைவையில் தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக்கப்பட வேண்டும். எனவே தமிழக சட்டமன்றத்தில் அதற்கான தனிதீர்மானம் ஒன்றை நிறைவேற்றி 33சதவீத இடஒதுக்கீட்டை நிறைவேற்றுமாறு ஒன்றிய அரசிற்கு அழுத்தம் தர வேண்டும்.

15. ஊடக விளம்பரங்களில் பெண்கள் பற்றிய ஆபாசமான, கண்ணிக்குறைவான, இழிவுபடுத்தக் கூடிய காட்சிகளை தடைசெய்ய வேண்டும்.

16. பெண்களின் பாதுகாப்பு, தகவல் தொடர்பு, அறிவை விரிவு செய்தல் என அனைத்திற்கும் கைபேசி என்பது இன்றியமையாத ஒன்றாக மாறி வரும் சூழலில் தமிழக பெண்கள் அனைவருக்கும் ஸ்மார்ட் போன் மற்றும் இணைய வசதியை தமிழக அரசு அளித்திட இலவசமாக அளித்திட வேண்டும்.

17. சுயஉதவிக்குழு பெண்கள் தயாரிக்கும் அனைத்து பொருட்களையும் விற்பனை செய்வற்கான சந்தை வாய்ப்புகளை தமிழக அரசு உருவாக்கி தர வேண்டும்.

18. பெண்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகள், வாய்ப்புகள் அனைத்தும் திருநங்கைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

19. குடும்பத்திற்கான அசையா சொத்துக்கள் வாங்கும் போது பெண்களின் சொத்துரிமையை உறுதிபடுத்தும், பாதுகாக்கும் வகையில் கணவன்மனைவி இருவர் பெயரிலும் கூட்டாக பதிவு செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

20. சுயஉதவிக் குழுவிற்கான விரிவான வலையம் **(network)** அமைப்பின் மூலம் சுயஉதவிக் குழுவிற்கான கடன் வசதிகளை வங்கிகளின் **microsat** கிளைகளின் மூலம் பெறச் செய்து பொருளாதார தளத்தில் முன்னேற செய்ய வேண்டும். இவற்றை கண்காணிக்க தனித்துறையை அமைக்க வேண்டும்.

21. முதியோர், கைம்பெண் பென்சன் தொகை 1000 த்தில் இருந்து 3000 மாக உயர்த்தப்பட வேண்டும். கைம்பெண்களுக்கு 20வயது மகன் அல்லது பேரன் இருந்தால் பென்சன் கிடையாது என்ற விதிமுறை நீக்கப்பட வேண்டும்.

22. மாநில அரசின் கட்டுபாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் பெண்களுக்கான கடன் உதவிகளை அதிகப்படுத்துதல் மற்றும் பல்வேறு நல திட்ட உதவித் திட்டங்களை அமல்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

23. பெண்களுக்கான தனி மேம்பாட்டு வங்கிகள் என்பது நடைமுறையில் தோல்வி கண்டுள்ளது. எனவே ஏற்கனவே இருக்கும் தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளின் மூலமே பெண்களுக்கான நலத்திட்ட மற்றும் கடன் உதவிகள் வழங்கப்பட வேண்டும். இவை முறையாக அமல்படுத்தப்படுவதை கண்காணிக்க மாவட்டம் தோறும் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் பி.பத்மாவதி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா மற்றும் நிர்வாகிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளனர்.

# தாராளமய, தனியார்மய நடவடிக்கைகளை நிறுத்திடுக!



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்தல்

தனியார் மற்றும் கார்ப்பரேட் துறையை ஊக்கப்படுத்தும் வகையில் பா.ஜ.க அரசாங்கம் , டாடா நிறுவனத்திற்கு ஏர் இந்தியா நிறுவனத்தை முன்பு அறிவித்தபடி, முறைப்படி தாரை வார்த்துவிட்டது.

இது டாடா நிறுவனத்திற்கு மோடி அரசின் குடியரசு தின பரிசு போல் உள்ளது. 69 ஆண்டுகளுக்குப் முன்பு, அப்போதைய ஜவஹர்லால் நேரு அரசாங்கம் 1953 ஆண்டு ஏர் இந்தியா நிறுவனத்தை ஏற்றுக்கொண்டது. அப்போது முதல் இந்நிறுவனத்தில் அரசாங்கம் பெரும் தொகையை முதலீடு செய்து வந்துள்ளது.

இதர பொதுத்துறை நிறுவனங்களைப் போலவே, ஏர் இந்தியா நிறுவனமும் வேண்டுமென்றே திறனற்ற முறையில் நிர்வகிக்கப்பட்டது. திறனற்ற நிர்வாக மேலாண்மை என்ற காரணத்தை முன்வைத்து ஏர் இந்தியா நிறுவனத்தை தனியார்மயமாக்கிட வலியுறுத்தப்பட்டது.

ஏர் இந்தியா நிறுவனத்தைத் தனியார்மயமாக்கி, மீண்டும் டாடா நிறுவனத்திடம் அளித்திருப்பதன் மூலம், அதிகாரப்பூர்வ விமானப் போக்குவரத்துச் சேவை நிறுவனமற்ற ஒரு நாடு என்ற மோசமான நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் அதன் அனைத்து தேவைகளுக்கும் தனியார் விமானச் சேவையைச் சார்த்திருக்க வேண்டிய துரதிர்ஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நிலங்கள் உள்ளிட்ட பெரும் மதிப்பு கொண்ட சொத்துக்கள் உடைய ஏர் இந்தியா நிறுவனத்தை மிகச் சொற்பமான விலைக்கு டாடா நிறுவனத்திற்கு வழங்கியிருப்பதன் மூலம், அரசாங்க பெரும் கடன் சுமைகளை ஏற்கிறது.

ஏர் இந்தியா நிறுவனத்தை நடத்திட டாடா நிறுவனத்திற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஏற்கனவே 10,000 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது. இவ்வாறு டாடா நிறுவனத்திற்கு மேலும் சலுகைகள் அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகிறது என்ற உண்மையை வெளிப்படுத்தி வரும் தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில், பொதுத்துறையைப் பலப்படுத்துவதற்கு பதிலாக, கார்ப்பரேட் மற்றும் தனியார் துறையின் ஆற்றல்மிகு ஏஜெண்டாக ஒன்றிய அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

தனியார்மய நடவடிக்கைகளை நிறுத்திடவும், தேசத்தையும், மக்களையும் பொருளாதார பேரழிவில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.




### மார்ச் – 28 – 29 அனைத்து தொழிற்சங்க பொது வேலைநிறுத்த

# ஆயத்த மாநாடு

மார்ச் 28, 29 மாற்றப்பட்ட அகில இந்திய பொது வேலைநிறுத்தம் முழு வெற்றிபெறுவதற்கான செங்கல்பட்டு மாவட்ட ஆயத்த மாநாடு ஜன 29 ல் செங்கல்பட்டு நகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட பொதுசெயலாளர் எம்.ஜஹாங்கீர், சிஐடியு மாவட்ட தலைவர் கே.சேஷாத்திரி, கூட்டு தலைமையில் நடைபெற்ற ஆயத்த மாநாட்டில் ஏஐடியுசி தேசிய செயலாளர் வகிதா நிஜாம் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி ஏஐடியுசி மாநில துணை பொதுசெயலாளர் கே. இரவி, சிஐடியு மாநில துணை பொதுசெயலாளர் எஸ். கண்ணன், ஏஐசிசிடியு மாநில சிறப்பு தலைவர் சொ.இரணியப்பன், எல்.டி.யு.சி மாவட்ட செயலாளர் கே.கோபால், தொழிலாளர் ஒற்றுமை இயக்க தலைவர் கபிலன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். ஏஐடியுசி மாவட்ட தலைவர் எம்.சங்கையா நன்றி கூறினார்.


# ஏஐடியூசி போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தருமபுரி ஏஐடியூசி தொழிலாளர் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் மாநிலம் தழுவிய ஆர்பாட்டத்தின் ஒரு பகுதியாக தருமபுரி பாரதிபுரம் மண்டல போக்குவரத்து அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு மண்டல தலைவர் இரவி தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் கே.துரைசாமி முன்னிலை வகித்தார். அரசு போக்குவரத்து கழக மாநில சம்மேளன செயலாளர் ஆர்.ஆறுமுகம் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை உடனடியாக உருவாக்க வேண்டும்,அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள நிலை மாற்றம் வேண்டும். பணிமனை தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ரூ 50 இன்சென்டிவ் வழங்க வேண்டும்.மத்திய அரசு அறிவித்துள்ள பஞ்சப்படி உயர்வை நிலுவையுடன் வழங்கவேண்டும்.அனைத்து தொழிலாளர்களுக்கும் பாகுபாடின்றி பணி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வாரிசு வேலை வழங்க வேண்டும்.காலிப் பணி இடங்களை நிரப்ப வேண்டும்.போக்குவரத்து தொழிலாளர்களுக்கு மருத்துவ திட்டத்தை அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் மண்டல பொது செயலாளர் சி.நாகராசன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,மாவட்டத் தலைவர் எம்.மாதேஸ்வரன்,மாவட்ட துணைத் தலைவர் ஆர். சுதர்சனன்,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் மனோகரன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



**அமைப்பு நிலையில் ஒற்றுமையும், பலப்படுத்துவதும், முன்னேற்றுவதும் என்பது அந்த அமைப்பின் அரசியல் அடிப்படையில் ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவம் ஆகியவற்றை கடைபிடிப்பதன் மூலமே உருவாக்க முடியும். வேறு வழிகளில் சாத்தியமில்லை. - லெனின்**

























## தமிழகம் முழுவதும்

# குடியரசு தின விழா உறுதிமொழி ஏற்பு

இந்தியக் குடியரசைப் பாதுகாப்போம்! அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்போம்! ஜனநாயகத்தை, மதச்சார்பின்மையைக் காத்திடுவோம்! பல்வேறு மதம் இனம் மொழி கொண்ட இந்தியாவின் பன்மைப் பண்பாட்டைப் போற்றுவோம்! பிளவுபடுத்தும் மதவெறிச் சக்திகளை வீழ்த்துவோம்! பெருமுதலாளிகள், கார்ப்பரேட்டுகளுக்குச் சாதகமாக தொழிலாளர் சட்டங்களைத் திருத்துவதை முறியடிப்போம்! நான்கு தலைமுறைகளாக போராடிப் பெற்ற தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்போம்! சங்கம் சேரும் உரிமையை, கூட்டு பேர உரிமையை நிலைநாட்டுவோம்! வங்கி, காப்பீடு, ராணுவ தொழிற்சாலைகள் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் மோடி அரசின் கொள்கைகளை அனுமதியோம்! அந்நிய கார்ப்பரேட்டுகளின் வேட்டைக்காடாக இந்தியாவை மாற்றுவதைத் தடுத்திடுவோம்! கட்டுமான, உடல் உழைப்பு தொழிலாளர்களின் நல வாரியங்களைப் பாதுகாப்போம்! அவர்களது சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வோம்! விவசாயிகள் தொழிலாளர்கள் ஒன்று படுவோம்! நாட்டையும் உழைப்பாளர் நலனையும் காக்க சங்க பேதமில்லாமல் ஒன்றுதிரள்வோம்! தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவோம்! என்பன உள்ளிட்ட பல்வேறு முழக்கங்களை முன்வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற்சங்கங்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இளைஞர், மாணவர், மாதர் அமைப்புகளின் சார்பில் தமிழகம் முழுவதும் குடியரசு தின விழா உறுதி மொழி ஏற்கும் நிகழ்வு குடியரசு தினத்தன்று நடைபெற்றது.

**விருதுநகர்:** விருதுநகர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் தேசிய கொடி ஏற்றி வைத்து உறுதிமொழி எடுக்கப்பட்டது. முன்னாள் மாணவர்மன்ற மாநிலத் தலைவர் எஸ்.செந்தில்குமார் தலைமை வகித்தார். மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சீ.தினேஷ் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். குடியரசு தின உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் சக்கணன், முனியசாமி சுவாமிநாதன், நகர செயலாளர் முத்துகுமார், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, வழக்கறிஞர் பகத்சிங், மீனவர்சங்க செல்வம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**பரமக்குடி:** ஏஐடியூசி, சிஐடியு, தொமுச, ஐஎன்டியூசி, எச்எம்எஸ் ஆகிய தொழிற் சங்கங்களின் சார்பில் பரமக்குடியில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் என்.கே.ராஜன் தலைமையில் உறுதி மொழியேற்பு நடைபெற்றது. ஏஐடியூசி சார்பில் என்.எஸ்.பெருமாள், எஸ். பி.ராதா, சி.செல்வராஜ் மற்றும் அனைத்து சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**அம்மாபேட்டை:** பாபநாசம் அருகே அம்மாபேட்டையில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றியப் பொருளாளர் க.முத்து தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கே.ராஜாராமன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பில் சிபிஐ அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார், வி.ச.ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன் உள்பட ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.

**பாபநாசம்:** பாபநாசம் அரசு மருத்துவமனை அருகில் உறுதி மொழி ஏற்கும் நிழக்வு நடைபெற்றது. கட்டுமானத் தொழிலாளர் சங்க மாவட்ட துணைச் செயலர் சுகுமாறன் தலைமை வகித்தார். இதில் ஏஐடியூசி மாவட்டச் செயலர் தில்லைவனம், ராஜேந்திரன், சுப்பிரமணியன் உள்பட பங்கேற்றனர். இதேப் போன்று பாபநாசம் வங்காரம் பேட்டையில் நடைபெற்ற உறுதி மொழியேற்பு நிகழ்ச்சிக்கு கட்டுமானத் தொழிலாளர் சங்க மாவட்டப் பொருளாளர் சௌந்தர்ராஜன் தலைமை வகித்தார்.

**மணப்பாறை :** மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிபிஐ ஒன்றிய செயலாளர் தங்கராசு தேசிய கொடியை ஏற்றினார். ஏ.ஐ.டி.யூ.சி.மாவட்ட துணைச் செயலாளர் சுப்ரமணியன் உறுதிமொழியை வாசித்தார். சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, நல்லுச்சாமி, ராகமத்துனிஷா உட்பட நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றனர்.

**திண்டுக்கல் :** சிபிஐ மாவட்டக்குழு சார்பில் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமையில், மூத்த தோழர் பழ.வெள்ளைச்சாமி தேசியக் கொடி ஏற்றினார். பின்னர் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயமணி, கட்சியின் மாவட்ட பொருளாளர் கே.ராஜாங்கம், வி.பாலகணேசன், கே.பிச்சைமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி :** தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், இலளிகம் தியாகி ஆர்.பச்சாகவுன்டர் நினைவு இல்லம் முன்பு, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தேசியக் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். நிகழ்சிக்கு ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமை வகித்தார். எல்.ஆர்.அபிமன்னன், எல்.கே.பெருமாள், வேல்முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பரங்குன்றம்:** திருப்பரங்குன்றம் பேருந்துநிலையம் அருகில் மதுரை புறநகர் மாவட்ட ஏஐடியூசி, சிஐடியூ, எச்எம்.எஸ் ஆகிய தொழிற் சங்கங்கள் இணைந்து நடத்திய குடியரசுதின விழாவிற்கு எஸ்.எம். பாண்டி தலமை தாங்கினார். தினகரமோகன் தேசிய கொடி ஏற்றினார். பின்னர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூரில் அண்ணாசிலை அருகில் தேசிய கொடியை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளரும் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளருமான டி. தண்டபாணி ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் தொமுச, சிஐடியு, ஐஎன்டியுசி, எச்.எம்.எஸ். சங்கங்களின் மாவட்ட தலைமை நிர்வாகிகள் தலைமை வகித்தனர். அரியலூர் மாவட்ட ஏஐடியுசி அலுவலகம் முன்பும் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

**செங்கம்:** திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரில் குடியரசு தினத்தில் சிபிஐ, ஏஐடியூசி, இளைஞர் பெருமன்றம் சார்பில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் மாதேஸ்வரன், சிபிஐ வட்ட செயலாளர் சர்தார், இளைஞர் பெருமன்றம் யுவராஜ் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

**திருவண்ணாமலை :** திருவண்ணாமலையில் காந்தி சிலை அருகே தேசியக் கொடியை ஏஐடியுசி மாவட்டத் தலைவர் வே. முத்தையன் ஏற்றினார். எல்.பி.எப். மாநில பேரவை செயலாளர் க.சௌந்தரராஜன் உறுதிமொழி வாசித்தார். ஏஐடியுசி மாவட்ட செயலாளர் த.இராசேந்திரன், இரா.தங்கராஜ், எஸ்.கிருஷ்ணராஜ் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். ஆரணி எஸ்.எல்.எஸ். மில் முன்பு வெங்கடேசன் தலைமையில் உறுதிமொழி வாசித்தார். ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் வி. குப்புரங்கன், டி. வெங்கடேசன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். செங்கம் வட்டம் அந்தனூர் கிராமத்தில் இளைஞர் பெருமன்ற யுவராஜ் தலைமையில் உறுதிமொழி வாசிக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம் போளூர் முருகாப்பாடி கிராமத்தில் சி. பன்னீர்செல்வம் உறுதி மொழி வாசித்தார்.

**பெருந்துறை:** பெருந்துறையில் தினசரி மார்க்கெட் முன்பு ஏஐடியுசி, சிஐடியு, எல்பிஎப் தொழிற்சங்கங்கள் சார்பில் தேசியக் கொடியேற்றி உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. கே.ஆர்.தங்கவேல் (ஏஐடியுசி), பி.ஜெகநாதன் (சிஐடியு), சி.மனோகரன் (எல்பிஎப்) ஆகியோர் உரையாற்றினர்.

**திருவாரூர் :** திருவாரூர் பழைய பேருந்துநிலையம் முன்பு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் துரை. அருள்ராஜன் தலைமையிலும், மாவட்ட தலைவர் சு.பாலசுப்ரமணியன் முன்னிலையிலும் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.ஸ்டீபன்ராஜ், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகர ஆசாத், மதிமுக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் ஆரூர் சீனிவாசன், சி.பி.ஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.பி.முருகானந்தம், நகர செயலாளர் எம்.ஏ.மாரியப்பன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செங்கல்பட்டு :** செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் முன்பு ஏஐடியுசி மாவட்ட துணைதலைவர் ஆர்.தேவராசன் தலைமையில் தேசிய கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. கட்டட சங்க செயலாளர் பி.ரவிச்சந்திரன் உறுதி மொழி வாசிக்க அனைவரும் உறுதி மொழி எடுத்தனர். ஏஐடியுசி மாவட்ட பொதுசெயலாளர் எம்.ஜஹாங்கீர், சிஐடியு மாநில துணை பொது செயலாளர் எஸ்.கண்ணன், தொ.மு.ச பேரவை மின் கழக மாநில துணை பொது செயலாளர் இரா.சக்கரை, ஏஐசிசிடியு மாநில சிறப்பு தலைவர் சொ.இரணியப்பன், எல்டியுசி மாவட்ட செயலாளர் இ. கோபால், ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

**புதுப்பட்டினம்:** புதுப்பட்டினம் ஏஐடியுசி, சிஐடியு இணைந்து தேசிய கொடியேற்றி உறுதிமொழியேற்றனர். இந்நிகழ்ச்சியில் ஏஐடியுசி செயலாளர் வி. ஆதிமூலம், என்.அருள்தாஸ், ஏ.மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மறைமலைநகர்:** மறைமலைநகரில் செக் பாயிண்ட், ஊரி, விர்கோ மற்றும் யுகால் ஐபெக்ஸ் தொழிற்சங்கத்தினர், கண்டோன்மென்ட், மற்றும் கல்பாக்கம் அணுசக்தி ஊழியர் சங்கத்தினர் தலைவர் சின்ன கோவிந்தன் தலைமையில் தேசிய கொடியேற்றி உறுதிமொழி ஏற்றனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் ஏஐடியூசி கொடியேற்று விழா நடைபெற்றது. இதில் ஆ.மூர்த்தி, எ.பிரகாசம், டாஸ்மாக் சங்க மாவட்ட தலைவர் ஏ.எல். இஸ்மாயில், டி.என்.ஆனந்தன், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.கோபி, எம்.காவேரி ஆகியோர் உறுதிமொழி ஏடுத்துக் கொண்டனர். மழலைச் செல்வங்களுக்கு இனிப்பு மற்றும் பேனா வழங்கப்பட்டது.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் உறையூரில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு இயக்கத்திற்கு திருச்சி மாவட்ட ஏஐடியுசி தலைவர் வே.நடராஜா தலைமை வகித்தார். ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் க. சுரேஷ், ஆட்டோ ராஜா, மற்றும் தொமுச, சிஐடியு, ஐஎன்டியூசி, ஹெச்.எம்.எஸ். எல்.டி.யு.சி. நிர்வாகிகள் உரையாற்றினார். திருவரங்கத்தில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு இயக்கத்திற்கு சிஐடியு பொதுச்செயலாளர் ரங்கராஜன் தலைமை வகித்தார். ஏஐடியுசி நிர்வாகிகள் ராமராஜன் அஞ்சர்தீன், சிவா, சண்முகம் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். திருவெறும்பூரில் நடைபெற்ற உறுதிமொழி இயக்கத்திற்கு தொமுச பேரவை செயலாளர் ஜோசப் நெல்சன் தலைமை வகித்தார். மணப்பாறையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு இயக்கத்திற்கு ஏஐடியுசி மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். மணிகண்டம் ஒன்றியம் சோமரசம்பேட்டையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு இயக்கத்திற்கு ஏஐடியுசி கட்டுமான சங்க மாவட்ட துணைச் செயலாளர் முருகன் தலைமை வகித்தார். இதில் மாவட்ட செயலாளர் செல்வக்குமார் உரையாற்றினார்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியம், பட்டமந்திரி கிராமத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தேசியக் கொடியை கே.வி.செங்கொடிச் செல்வன் ஏற்றிவைத்தார். வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**மணிகண்டம்:** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கம் மணிகண்டம் ஒன்றிய குழு சார்பில் சோமரசம்பேட்டையில் உள்ள அலுவலகத்தில் குடியரசு தின நிகழ்ச்சி மணிகண்டம் ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சி. செல்வகுமார் தேசியக் கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

**மதுராந்தகம்:** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் மெய்யூர் இந்திராநகரில் தேசிய கொடி ஏற்றி உறுதி மொழி ஏற்பு நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் கேவி.சேகுவேராதாஸ்,தொகுதி செயலாளர் மு.நாகராஜ் ப.மணிகண்டன் ப.பரத்குமார்.க.சஞ்சை புத்தர் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

### கர்நாடக மாநிலத்தில்

## இளைஞர் பெருமன்றம் குடியரசுதின உறுதிமொழி ஏற்பு



கர்நாடகா முழுவதும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் குடியரசை காப்போம் உறுதிமொழி ஏற்பு

குடியரசு நாள் விழாவை ஒட்டி ஜனவரி 26 ஆம் நாள் அன்று, கர்நாடகா மாநிலத்தில் பல இடங்களில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தேசியக் கொடி ஏற்றி பாசிச சக்திகளிடம் இருந்து குடியரசை கப்போம், அரசியல் சாசனத்தை பாதுகாப்போம் என்று உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. கர்நாடக மாநிலத் தலைவர் ஹரிஷ் பாலா, மாநிலச் செயலாளர் சந்தோஷ் ஆகியோர், இந்நிகழ்வை அனைத்து கிளைகளும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று விடுத்த கூட்டறிக்கையின் படி நிகழ்வுகள் நடைபெற்றன.

மாநிலத் தலைநகர் பெங்களூரு, மங்களூரு, பீதர், தாவணகரே, குல்பர்கா, குடகு, கங்காவதி, ஹர்பனஹள்ளி, ஹுவின ஹடுகள்ளி, தாசரஹள்ளி போன்ற இடங்களில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு பாசிச சக்திகளிடமிருந்து குடியரசையும், அரசியல் சாசனத்தையும் காப்போம் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள்

**தென்காசி மாவட்டம்**

தென்காசி மாவட்டம் செங்கோட்டை தாலுகாவில் செங்கோட்டை நகர கிளை மாநாடு நடைபெற்றது செயலாளராக சி.சுப்பிரமணியன் துணைச் செயலாளராக எஸ்.ஆழ்வார் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டலம் கிளை மாநாட்டில் செயலாளராக ஆர்.குத்தாலிங்கம், மாரிதங்கம் துணை செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். தேன்பொத்தை கிளை மாநாட்டில் செயலாளராக ஆர்.செல்லையா, துணைச் செயலாளராக திருமலையம்மாள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மேற்கண்ட மாநாடுகளில் செங்கோட்டை தாலுகா செயலாளர் மாரியப்பன், துணைச் செயலாளர் பழனிச்சாமி ஏஐடியூசி சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ராயகிரியில் 12வது வார்டு கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக சே.பசுபதிராஜ், துணைச் செயலாளராக க.ராமசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

3வது வார்டு கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக ந.தங்கராஜ், துணைச் செயலாளராக ஈஸ்வரன் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மேற்கண்ட மாநாடுகளில் நகர செயலாளர் எஸ்.சமுத்திரம், துணைச் செயலாளர் சொரிமுத்து, மாவட்ட குழு உறுப்பினர்கள் சமுத்திரகனி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி தாலுகா ஆயிரப்பேரி கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக எஸ்.கோவிந்தன், துணைச் செயலாளர்களாக வி.துரைராஜ், பி.பூவையா, பொருளாளராக எம்.எஸ்.கிட்டப்பா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலப்பாவூர் கிளை மாநாடு நடைபெற்றது.

செயலாளராக மாரியப்பன், துணைச் செயலாளராக செல்லத்துரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஆலங்குளம் தாலுகா கீழப்பாவூர் கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக எம்.சுடலையாண்டி துணைச் செயலாளராக எம்.சாந்தி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேற்கண்ட மாநாடுகளில் மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா ஐயப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

வாசுதேவநல்லூர் ஒன்றியம் கோடாங்கிபட்டி கிளை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் செயலாளராக பிரேமா, துணைச் செயலாளராக மாரிச்செல்வம் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் ஒன்றிய செயலாளர் ப.வேலு, ஒன்றிய குழு உறுப்பினர் பாலவிநாயகம், மாவட்ட குழு உறுப்பினர் சமுத்திரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேவிபட்டினம் கிளை மாநாடு நடைபெற்றது. ஆறு கிளைகளாக பிரிக்கப்பட்டு பின்னர் தனித்தனி பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதனடிப்படையில் 1வது கிளை செயலாளராக சித்தன், 2–வது கிளை செயலாளராக ராமர், 3வது கிளை செயலாளராக முருகேஸ்வரன், 4வது கிளை செயலாளராக ஏசையா, 5வது கிளை செயலாளராக அந்தோணிசாமி, 6வது கிளை செயலாளராக ராமகிருஷ்ணன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர் மேற்கண்ட மாநாட்டில் மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஒன்றிய செயலாளர் ப.வேலு, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிங்காரவேலு, மாவட்ட குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், அருணாசலம் விவசாய சங்க, வேலுச்சாமி ஆகியோர் பங்கேற்றனர்.

**புதுப்பட்டி கிளை:** தர்மபுரி மாவட்டம், பென்னாரம் வட்டம் புதுப்பட்டியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நடை பெற்றது. மார்கண்டன், குமார் ஆகியோர் தலைமை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.மாதையன் மாவட்டக்குழு உறுப்பினர் பழனி ஆகியோர் கலந்து கொண்டு இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார்.

இதில் புதுப்பட்டி ஏ கிளை செயலாளராக மார்க்கண்டன், துணை செயலாளராக ரமேஷ், கிளை பொருளாளராக ஆறுமுகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அதேபோல் புதுப்பட்டி பி கிளையில் கிளை செயலாளராக துரை, துணை செயலாளராக குமார்,பொருளாளராக கந்தசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கோடல்பட்டியில் கட்சி கிளை மாநாடு நடைபெற்றது. நாகராஜ் தலைமை தாங்கினார். கிளை செயலாளராக மாதையன், துணை செயலாளராக நாகராஜ், பொருளாளராக அண்ணாதுரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தளவாய்அள்ளி கிளை:** தருமபுரி மாவட்டம் இண்டூர் வட்டாரம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தளவாய்அள்ளி கிளை மாநாடு நடைபெற்றது. வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர் ராஜகோபால் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி ஆகியோர் அரசியல் சூழ்நிலை குறித்து பேசினர். செயலாளராக பாலாஜி, துணைச் செயலாளராக சின்னமுனி, பொருளாளராக ரஜினி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் இண்டூர் வட்டார பொருளாளர் எம்.மாதையன், வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**அவிநாசி நகர கிளை மாநாடு:**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் மாவட்டம் அவிநாசி நகர கிளையின் மாநாடு ஏ.ஜி.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் ஒன்றிய துணைச் செயலாளர் வி.கோபால், ஒன்றிய குழு உறுப்பினர் ஆர்.ஷாஜஹான் ஆகியோர் அரசியல் உரையாற்றினர். அ.முகமது யாசின் செயலாளராகவும், ச.ஷேக்ஸ்பியர் துணைச் செயலாளராகவும் 5 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நகரத் துணைச் செயலாளர் ச.ஷேக்ஸ்பியர் நன்றி கூறினார்.




**மெய்யூர் கிளை மாநாடு:** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் 2வது கிளை மாநாடு கி.கதிர்வேல் தலைமையில் நடைபெற்றது. கட்சி கொடியினை மாவட்ட துணை செயலாளர் பி.எஸ். எல்லப்பன் ஏற்றிவைத்தார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கேவி.சேகுவேராதாஸ் வாழ்த்துரை வழங்கினார். செ.இன்பராஜ் கிளை செயலாளராகவும், துணை செயலாளர்களாக மு.நாகராஜ், ம.விஜய் ஆகியோரும், பொருளாளராக பா.மணிகண்டனும் தேர்வு செய்யப்பட்டனர்.




**செங்கம் வட்ட கிளை மாநாடுகள்:** திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டாரத்தில் ஊர்கவுண்டனூர், புதிய அரசம்பட்டு, பன்ரேவ், குட்டூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வே முத்தையன், எம். எஸ். மாதேஸ்வரன், இரா. தங்கராஜ், சர்தார், ராஜா, வஜீர்பாஷா மற்றும் பலதோழர்கள் பங்கேற்றனர்.

**கண்ணகி நகர் கிளை மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணகி நகர் கிளையின் செயலாளர் மைமூன் பீவி, செயலாளர் பர்வீன் ஆகியோர் தலைமையில் இரண்டு கிளையும் இணைந்து கிளைமாநாடு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எஸ்.ஏழுமலை அரசியல் விளக்கவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பழ.முருகப்பன், கண்ணதாசன், ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



**பேடறள்ளி கிளை மாநாடு:** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இண்டூர் வட்டாரம் பேடரஅள்ளியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நிர்வாகி ராஜேந்திரன் தலைமையில் நடைப்பெற்றது மாநாட்டில் கட்சியின் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் அரசியல் நிலை எதிர்கால கடமைகள் குறித்து பேசினார். கூட்டத்தில் கிளை செயலாளரா க வேலு துணைச் செயலாளராக சின்னபையன்,பொருளாளராக மெய்யழகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எற்றபையனஅள்ளி ஊராட்சி, சின்னாகனஅள்ளி ஜீவா நகர்கிளை மாநாடு நடைபெற்றது. நிர்வாகி காசி தலைமை வகித்தார்.மாவட்ட பொருளாளர் ஏம்.மாதேஸ்வரன் அரசியல் நிலை குறித்து பேசினார். இண்டூர் வட்டார பொருளாளர் எம்.மாதையன்,கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இறுதியில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி 13ம் பக்கம் >>



# கோவை காவல்துறை: பேசும் உரிமையை மறுப்பதா?

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தேச தந்தை அண்ணல் காந்தி 1948 ஜனவரி 30ஆம் தேதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். உலகை உலுக்கிய இந்தப் படுகொலை சம்பவத்தின் முதல் குற்றவாளி நாதுராம் கோட்சே என்பதையும், இந்து மதவெறி கொண்டு ‘மகாத்மா’ அழித்தொழிக்கப்பட்டார் என்பதையும் நாடும், மக்களும் நன்கறிவர். இந்த நிலையில் அண்ணல் காந்தி மதவெறிக்கு பலியான 73ஆம் ஆண்டு நினைவு தினம் சமூக நல்லிணக்க உறுதி ஏற்பு நாளாக கடைப்பிடிக்காப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக கோவை மாநகரில் நடந்த நிகழ்வில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஜி.ராமகிருஷ்ணன் உறுதி மொழி வாசித்துக் கொண்டிருந்த போது கோவை மாநகரக் காவல்துறை அதிகாரிகள் நேரடியாக தலையிட்டு, உறுதிமொழி வாசிப்பை இடைமறித்து குறுக்கீடு செய்து, “நாதுராம் கோட்சே” என்ற பெயரை உச்சரிக்கக் கூடாது. அவரை மதவெறியர், கொலைக் குற்றவாளி என்று கூறக்கூடாது என்று தடுத்துள்ளனர். கோவை மாநகரக் காவல்துறையின் நடவடிக்கை அதிர்ச்சியளிக்கிறது. தேச தந்தையை மதவெறி பிடித்து, படுகொலை செய்த குற்றவாளிக்கு, நீதிமன்றம் தூக்குதண்டனை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த உண்மையை சொல்லவும் காவல்துறை அனுமதிக்காது எனில் அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை கோவை மாநகரக் காவல்துறை பலவந்தமாக பறிக்கும் செயலாகும்.

கோவை மாநகரக் காவல்துறையின் சட்ட அத்துமீறலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துமீறிய காவல்துறை அதிகாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 57. நாட்டுக்கு வாழ்

**தன்னலம் பேணுவதின் சாற்றுவமேல் தாரணிவாய்**
**மன்பதைப் பேணுவதே மாண்பு.**

தன்பெண்டு, தன்பிள்ளை என்று தன்னலம் மட்டுமே குறிக்கோளாக கொண்டு வாழ்தல் நன்றன்று. உலகம் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் உழைத்து வாழ்வதே மேல்.

**நமக்குச் சமுதாய மில்லை அதற்குத்தான்**
**நாமாதல் சாலச் சிறப்பு.**

நம்வாழ்க்கைக்காகவே சமுதாயம் உள்ளது என்று எண்ணாமல் சமுதாயத்திற்காக நாம் உள்ளோம் என்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும்.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஐ.ஏ.எஸ்.பணிகளுக்கான புதிய விதிகள் திருத்தம் என்பது, இந்துத்துவாவின் வெறுப்பு கருத்தியல் நிர்வாகத்தை உருவாக்கும் முயற்சிதான் என்றும்,

இது இந்திய கூட்டாட்சி முறையை தகர்த்து எறியும் என்றும் த.லெனின் கட்டுரை ஆணித்தரமாக விளக்குகிறது.

– **க.பரமசிவம்**, தூத்துக்குடி

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஜனசக்தியின் வடிவமைப்பு, படங்கள் நன்றாக அமைகிறது. ஆனாலும், அரசியலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாரம்தோறும் அந்தந்த வாரத்தில் அரசியல் நிலவரம் பற்றி விமர்சன அடிப்படையில் (பாலிமிக்ஸ்) அடிப்படையில் ஒரு கட்டுரையாவது வெளி வர வேண்டும். கேள்வி பதில் பகுதி வெளிவந்தால் வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

– **மு.பழனியப்பன்**, திருவான்மியூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பா.ஜ.க.ஆட்சி நாட்டை குழப்பத்தில் ஆழ்த்தி பேரழிவில் தள்ளி விட்டது. இதிலிருந்து மீள்வதற்கு மதச்சார்பற்ற ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் ஒரு வரலாற்றுப் போர் அவசியம் என்று வலியுறுத்துகிறது பினாய் விஸ்வம் அவர்களின் கட்டுரை. வரலாற்றை தீர்மானிக்கும் சக்திகள் எது? என்பதை விளக்குகிறது தோதாத்ரியின் வர லாற்றுப் பொருள்முதல்வாதம். பாலம் கிடைக்குமா? என ஏங்கும் பாவப்பட்ட மக்களின் குரலாக ஒலிக் கிறது என்.எஸ்.பிரதாப் சந்திரன் கட்டுரை.

– **புஷ்பராஜ்**, செங்குன்றம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

குடியரசின் அடித்தளங்கள் தகர்க் கப்படுகின்றன. கூட்டாட்சி முறையைப் பாதுகாப்போம் என்ற பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களின் கட்டுரை குடியரசு தினத்திற்கு பொருத்தமாகவும், ஆழமாகவும் பொருள் பொதிந்தும் அமைந்திருக்கிறது. ஆளுநர்களா? ஒன்றிய அரசின் அடிமைகளா? என்ற பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களின் கட்டுரை நல்ல சாட்டையடி.

– **சி.கோபி**, மேட்டுப்பாளையம்

## வீ.ராஜமோகன் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோழர் வீ.ராஜமோகன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நாளில் அவரது இல்லத்திற்குச் சென்று ஐசிஎப் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி யின் சார்பில் வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

## தோழர் சி.எஸ். கட்டிட நிதி

தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மூன்று மாவட்டங்கள் இணைந்து நடத்திய கட்சி பேரவையின் போது சி.எஸ்.சுப்பிரமணியம் நினைவு கட்சி கல்வி கட்டிட நிதியாக சிதம்பரனார் மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி கட்டுமானத் தொழிலாளர் சங்கம் தூத்துக்குடி மாநாகரா வடபகுதி கிளையின் சார்பாக கிளை செயலாளர் த.சுப்பிரமணியன் ரூ.5000 மாநில செயலாளர் இரா. முத்தரசன் அவர்களிடம் வழங்கினார். அருகில் மாவட்ட செயலாளர் அழகுமுத்துபாண்டியன், துணை செயலாளர் கரும்பன் உடனிருந்தனர்.



### அமைதிப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு

## முற்றுகை போராட்டம் ஒத்திவைப்பு

பாபநாசம் அருகே அம்மாபேட்டை அடுத்த நெடுவாசல் கிராம நிர்வாக அலுவலரின் செயல்பாடுகளைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 28 ந் தேதி நெடுவாசல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற இருந்தது. இந்தச் சூழ்நிலையில் 27 ந் தேதி அம்மாபேட்டை கிருஷ்ணன்கோவில் திருமண மண்டபத்தில் அம்மாபேட்டை வருவாய் ஆய்வாளர் சாந்தி தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெற்றது இக் கூட்டத்தில் மின் இணைப்பு பெறுவதற்கு உடன் சான்று வழங்குவது, பட்டா மாறுதல் உடன் மேற்கொள்வது என்றும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கிராமத்தில் நில அளவை செய்திட 20 நாட்களில் நடவடிக்கை மேற்க் கொள்வது உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு உறுதி அளித்ததைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 28 ந் தேதி நடைபெற இருந்த அலுவலக முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் ஆர் செந்தில்குமார், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் ஆர். எஸ்.பாலு, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, நகரச் செயலாளர் கே.ராஜாராமன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





உண்மையில் ஜாதியை வெறுத்தோர், எந்த ஜாதியை இகழ்ந்து, தன் ஜாதியைப் புகழ் வார்கள்? பொதுவாக மதங்களைக் கைவிட்டோர், எந்த மதத்தைத் தாழ்த்தி, எந்த மதத்தை உயரத்துவார்கள்? உண்மையில் மதங்களை விலக்கியோருக்கும், ஜாதியை தள்ளி வந்தவர்களுக்கும் எல்லா ஜாதியும் ஒன்றே. எல்லா மதங்களும் ஒன்றே. உயர்வு தாழ்வு கிடையாது. எல்லாம் ஒதுக்கி வைக்க வேண்டியவைகளே. எந்தச் சுயமரியாதையுடையோனும் தன்னை புகழ்ந்து பிறரை இகழ மாட்டான். தன்னுடைய நன்மைக்கே உழைக்க மாட்டான்.

சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம். பக்கம் 1489. புதுவுலகம் - ஜூன் 1935.

### ராணுவம் வடிவமைத்துள்ள சீருடைகளை உற்பத்தி செய்ய

# அனுமதி பெறுகின்ற வரை போராட்டம்

### ஆவடி ஒ.சி.எப். தொழிலாளர்கள் குடியரசு தினத்தன்று உறுதிமொழி ஏற்பு

இந்திய ராணுவ வீரர்கள் போர்க் களத்திலும் பயிற்சியின்போதும் அணிகின்ற அனைத்து விதமான சீருடைகளையும், ஆடைகளையும் தயாரிப்பதற்காக 1961ஆம் ஆண்டு ஆவடியில் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் மற்றும் அன்றைய தமிழக முதல்வர் பெருந் தலைவர் காமராஜர் அவர்களால் உருவாக்கப்பட்டது.

ஒ.சி.எப். தொழிற்சாலை கடந்த 60 ஆண்டுகளில் நான்கு முறை ராணுவம் தன்னுடைய சீருடைகளுடைய வடிவமைப்பை மாற்றியமைத்துள்ளது. இந்த நான்கு முறையும் இதற்கான அனைத்து பணிகளையும் சிறப்பாக செய்து ராணுவ வீரர்கள் திருப்தியடைகின்ற அளவிற்கு தொடர்ந்து அவர்களுக்கான பல்வேறு ஆடைகளையும், சீருடைகளையும் ஒ.சி.எப். தொழிற்சாலை உற்பத்தி செய்து வருகிறது. சமீபத்தில் ஒன்றிய அரசு ஆவடி ஒ.சி.எப். உள் பட 41 தொழிற்சாலைகளையும் கார்ப்பரேஷனாக மாற்றியமைத்தது. இதனை எதிர்த்து தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

மேற்கண்ட சூழ்நிலையில் மீண்டும் ஒருமுறை ராணுவ வீரர்களின் ஆடையில் பல்வேறு மாறுதல்கள் செய்து வடிவமைக்க வேண்டும் என்கின்ற ஆலோசனை ராணுவத் தலைமையகத்தில் நடந்தபோது வழக்கம்போல் ஆவடி ஒ.சி.எப். தொழிற்சாலை அப்பணியினை தானாகவே செய்யத் துவங்கியது.

ஆனால், ராணுவத் தலைமையகம் மத்திய அரசின் ஆடை வடிவமைப்பு நிறுவனம் மற்றும் ஜெ.சி.டி. தனியார் துணி ஆலையுடன் இணைந்து புதிய ராணுவ சீருடையை உருவாக்கி அதனை 15.01.2022ஆம் நாள் ராணுவ தினத்தன்று ராணுவத் தலைமைத் தளபதி அறிமுகப்படுத்தினார். எதிர் காலத்தில் இச்சீருடைகளை தயாரிப்பதற்கான அனுமதி இனிமேல் நேரடியாக ஒ.சி.எப். தொழிற்சாலைக்கு கிடைக்காது எனவும் தனியாருடன் போட்டியிட்டுத்தான் இச்சீருடைகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியைப் பெற வேண்டும் எனவும், பாது காப்பு அமைச்சகமும், ராணுவத் தலைமையகமும் முடிவெடுத்துள்ளது. இதனைக் கண்டித்து தொழிற்சங்கங்கள் ஆவடி ஒ.சி.எப். தொழிற்சாலைக்குத்தான் இப்பணியினை வழங்க வேண்டுமென போராடி வருகிறார்கள். அதனை ஒட்டி 26.01.2022ஆம் நாள் குடியரசு தினத்தன்று ஆவடி ஒ.சி.எப். கிருஷ்ணமேனன் சிலை அருகில் அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் சங்கமித்து ஒ.சி.எப். தொழிற்சாலைக்கு புதிய ராணுவ சீருடையை உற்பத்தி செய்வதற்காக நேரடியான அனுமதியையும், ஒதுக்கீட்டையும் மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கான தொடர் போராட்டங்களை நடத்திட உறுதிமொழி எடுத்தனர்.

இப்போராட்டத்தை அகில இந்திய பாதுகாப்புத்துறை ஊழியர்கள் சம்மேளன பொதுச்செயலாளர் சி.ஸ்ரீகுமார் தலைமையேற்று உறுதிமொழியை வாசித்தளித்தார். நிகழ்ச்சியில் தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் முகமது மீரா, பி.எம்.எஸ். தொழிற்சங்கத் தலைவர் சவுந்தர்ராஜன் உள்பட பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.




### தூய்மை பணியாளர் எம்.கோகிலா மறைவு:

## படத்திறப்பு, குடும்பநல நிதியளிப்பு



தருமபுரி மாவட்ட உள்ளாட்சி பணியாளர் சம்மேளனத்தின் நல்லம்பள்ளி ஒன்றிய துணைச் செயலாளர் எம்.கோகிலா மறைவை ஒட்டி அவரின் உருவ படத்தை திறந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஏஐடியூசி உள்ளாட்சி பணியாளர் சம்மேளத்தின் மாவட்டத் தலைவர் என்.மனோகரன் தலைமை வகித்தார். சின்னபங்குநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.சசிகலா ராஜசேகர் கோகிலாவின் உருவ படத்தை திறந்து வைத்து பேசினார். ஏர்ரபையனஅள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சிலம்பரசன், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எம். மாதேஸ்வரன், மாவட்ட பொது செயலாளர் கே.மணி, மாவட்ட துணைத் தலை வர் ஆர். சுதர்சனன், சிபிஐ இண் டூர் வட்டார பொருளாளர் எம். மாதையன் உள் ளிட்டோர் பங்கேற்றனர்.

துய்மை பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள் உள்ளாட்சி சம்மேளனம் சார்பில் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.1 லட்சம் வழங்குவதென அறிவித்து முதற் கட்டமாக ரூ.50000 ஆயிரத்தை எம்.கோகிலா குடும்பத்திற்கு வழங்கினர்.

# இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்ட மீனவர்களுக்கு ஆறுதல்

நாகை மாவட்டம், ஆரிய நாட்டு தெரு, மீனவர் குப்புராஜ் அவர்களுக்கு சொந்தமான பைபர் படகில், வேதாரண்யம் அருகே 20 நாட்டிகல் கடல் மைல் தூரத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எம். மணிகண்டன் (25), எஸ்.நிர்மல்ராஜ் (24), கே.தில்லைநாதன் (26), கே. வசந்தபாலன் (25), ஆகியோரை இரண்டு படகில் வந்த 8 இலங்கை கடற்கொள்ளையர்கள் கடுமையான ஆயுதங்களால் தாக்கினர்.

இதனால் தலை மற்றும் உடம்பு பகுதியில் பலமான காயம் ஏற்பட்டு, நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இவர்களில் மீனவர் கே.வசந்த பாலன் இடது கையில் கடுமையான வெட்டுக் காயத்துடன் தற்போது தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பெற்று வருகிறார்.

மீனவர்கள் தாக்கப்பட்டதை தொடர்ந்து, இஞ்சின், பிடித்து வைக்கப்பட்டிருந்த மீன்கள், பேட்டரி 2, தூண்டில் வலைகள், ஸ்டார்ச் லைட், பெட்ரோலுடன் 30 லிட்டர் கேன், ஜி.பி.எஸ்.கருவி, எக்கோ சவுண்டர், நங்கூரம் உள்ளிட்ட சுமார் 3 லட்சம் மதிப்புள்ள மீன்பிடி சாதனங்கள் கொள்ளையடித்து சென்றதையும் தெரிவித்தார்கள். மீனவர்களின் உடல் நலம் குறித்து விசாரிக்கப்பட்டது.

சிகிச்சை பெற்று வரும் மீனவர்களுக்கு தமிழக அரசால் வழங்கக்கூடிய நிதி உதவி பயன் தொடர்பாக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை நாகப்பட்டினம் இணை இயக்குனர், மற்றும் மீன்வளத்துறை உதவி இயக்குனர் ஆகியோரை நேரில் சந்தித்து வலியுறுத்தப்பட்டது.

நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் மீனவர் தொழிலாளர்களை, தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி. சின்னதம்பி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினரும், நாகை மாவட்ட ஊராட்சி உறுப்பினருமான வி.சரபோஜி, தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், நாகை மாவட்ட சங்க தலைவருமான உ. ராஜேந்திரன் மற்றும் மீனவர் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# சமவேலைக்கு சம ஊதியத்தை உறுதிப்படுத்துக!

## மாதர் சம்மேளனம் தீர்மானம்



விருதுநகரில் இந்திய மாதர்தேசிய சம்மேளனத்தின் மாவட்ட பேரவைக் கூட்டம்நடைபெற்றது.பாண்டிச்செல்வி தலைமை வகித்தார். பழனியம்மாள் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் ஜி.மஞ்சுளா தொடங்கி வைத்து இன்றைய பெண்கள் நிலை குறித்தும் நமது நடவடிக்கைகள் குறித்தும் பேசினார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்ட பொருலாளர் சமுத்திரம் ஆகி யோர் வாழ்த்தி பேசினர். பி. மாரீஸ்வரி தலைவராகவும், பி.கல்பனா, வி.ராஜாத்தி ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், எ. பாண்டிச்செல்வி செயலாளராகவும், டி.கவிதா, தீபிகா ஆகியோர் துணை செயலாளர் களாகவும், இ. முத்துலட்சுமி பொருளாளராகவும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். 4லட்சம் பெண்கள் பணிபுரியும் பட்டாசு தொழிலை பாதுகாக்கவும், சமவேலைக்கு சம ஊதியத்தை உறுதிப்படுத்தவும், பாராளுமன்ற, சட்டமன்றங்களில் 33சதவீத இட ஒதுக்கீட்டை அமுல்படுத்தவும், பாலியல் குற்றங்களை தடுத்து நிறுத்த உள்ளூர் கமிட்டிகள் அமைக்கவும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. ரெஜினாமேரி நன்றி கூறினார்.

# தோழர் அரங்க சின்னப்பா முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி



மார்க்சிய கல்வி ஆசிரியர் தோழர் அரங்க சின்னப்பா முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர், மார்க்சிய கல்வி ஆசிரியர், தஞ்சை மாவட்ட செய லாளராகவும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினராகவும் சிறப்பாக செயலாற்றியவர். அவருடைய முதலாம் ஆண்டு நினைவு நாள் ஜன. 21 அன்று நடைபெற்றது. தஞ்சை கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற மலரஞ்சலி நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி மலர் தூவி அஞ்சலி செலுத்தி தொடங்கி வைத்தார். ஏஐடியுசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், கட் டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி. கிருஷ்ணன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வீர மோகன், ம.விஜயலட்சுமி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன் உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

பட்டுக்கோட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நினைவு நாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட குழு உறுப்பினர் சி.பக்கிரிசாமி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் சீனி.முருகையன், மதுக்கூர் ஒன்றிய செயலாளர் பாரதிமோகன், பேராவூரணி ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம், பட்டுக்கோட்டை ஒன் றிய செயலாளர் காளிதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நெல் கொள்முதலில் குறைபாடுகளைக் களைய பிப்.1 லிருந்து முதல் கட்ட நடவடிக்கை

## தொழிற்சங்க நிர்வாகக்குழு கூட்டம் முடிவு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூர் சங்க அலுவலக கூட்டரங்கில் மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு, மாநில செயலாளர் ஜி. சுப்ரமணியம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார், மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு அறிவித்தும் நெல் கொள்முதலில், குறைபாடுகள் குறையவில்லை என்ற பல்வேறு தரப்பினரின் கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டு நெல் கொள்முதலில் உள்ள குறைபாடுகளை களைவது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. குறிப்பாக குறைபாடுகளுக்கு அடிப்படையான காரணமான லாரி வாடகைக்கு மேல் மாமுல் என்ற பெயரில் லஞ்சம் கேட்பது, அதிகாரிகளுக்கு மூட்டைக்கு இவ்வளவு லஞ்சம் பெறும் நிரந்தர நடைமுறை, நியாயமற்ற முறையில் எடை இழப்பு தொகை வசூலிப்பது போன்றவற்றை தடுக்க சங்க சார்பில் நடவடிக்கை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

வருகிற 1ஆம் தேதியிலிருந்து முதல்கட்டமாக சங்கத்தின் சார் பாக அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் கடும் முயற்சி மேற்கொண்டு கொள்முதல் நிலையத்திற்கு வருகின்ற லாரிகள் நெல் ஏற்றுவதற்கு மாமூல் கேட்டால் அந்த லாரிகளில் நெல் ஏற்றுவது இல்லை என்றும் மேல் அதிகாரிகள் லஞ்சம் கேட்கும் பொழுது தர மறுத்து உயர் அதிகாரிகளுக்கு புகார் அளிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

>> 11ம் பக்கத் தொடர்ச்சி



**எழுமல் மந்தை கிளை மாநாடு:** தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் எழுமல் மந்தை கிராமத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நடைபெற்றது. கூட்டத்திற்கு நரசிம்மன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி மாதையன் இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார்.

இந்த கிளை மாநாட்டில் பென்னாகரம் வட்டார செயலாளர் பி. முனியப்பன்,மாவட்டக்குழு உறுப்பினர்கள் இல. தர்மராஜா, சின்னசாமி, முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை செயலாளராக ராஜா, துணை செயலாளராக நரசிம் மன் கிளை பொருளாளராக நாகராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



**கே.டி.சி. நகர் கிளை மாநாடு:** நெல்லை மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாளை ஒன்றிய கே.டி.சி. நகர் கிளை மாநாடு ஏ.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ நெல்லை மாவட்ட செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் எம்.நவராஜ் மோசஸ் செயலாளராகவும், ஏ.அகஸ்டின் துணைச்செயலாளராகவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**மணியக்காரன்பாளையம் கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மணியக்காரன்பாளையம் கிளை மாநாடு வி.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. என்.கல்யாணசுந்தரம் செயலாளராகவும், எம்.சபாபதி துணைச் செயலாளராகவும், வி.சின்னசாமி பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு

# இலவச மடிகணினியை உடனே வழங்குக

## மாணவர் பெருமன்றம் தீர்மானம்




விருதுநகர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் விருதுநகர் மாவட்ட பேரவைக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீராம் தலைமை வகித்தார். மாணவர் பெருமன்ற முன்னாள் மாநிலத் தலைவர் செந்தில்குமார் தொடங்கிவைத்துப் பேசினார். மாநில செயலாளர் சீ.தினேஷ் மாணவர்களின் தற்போதைய நிலை, நெருக்கடி மற்றும் கடமைகள் குரித்து விரிவாகப் பேசினார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், தகஇபெ மாவட்ட தலைவர் மருத்துவர் த.அறம், வழக்கறிஞர் லி.பகத்சிங் ஆகியோர் பேசினர். மாவட்ட தலைவராக ஸ்ரீராம், செயலாளராக பா.இராமமூர்த்தி, துணை செயலாளர்களாக சிங்கராஜ், டேவிட், பொருளாளராக சதீஷ்குமார் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். விருதுநகரில் சட்ட கல்லூரி தொடங்க வேண்டும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடி கணினியை உடனே வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

# இளைஞர் பெருமன்ற கிளை அமைப்பு கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சிக் குட்பட்ட அம்பேத்கர் நகர் பகுதியில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கிளை பாலாஜி தலைமையில் அமைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில், மாவட்டக்குழு உறுப்பினர் வி.இ.இராஜீவ்காந்தி, வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், து.தலைவர் கே.போஸ், பஞ்சநாதன், கருப்புசாமி, என்.தேவா உள்ளிட்டோர் பங்கேற்றனர். தலைவராக எம்.ஜெயராஜ், செயலாளராக வி.பாலாஜி, பொருளாளராக கே.ஜெயராஜ், துணைச் செயலாளராக கே.ஜெயக்குமார், துணைத்தலைவராக ஆர்.அப்துல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.





## குருதிக் கொடை

தொடர்ந்து 28வது ஆண்டாக குருதிக் கொடையை, கே.எம்.சி. மருத்துவ மனையில் இரா. எத்திராஜன் வழங்கினார்.

# கோவையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கைது

குடியரசு தின விழா பேரணியில் தமிழகம் சார்பில் அணிவகுப்பில் கலந்து கொள்ளும் வாகனங்களுக்கு அனுமதி மறுத்ததை கண்டித்து கோவையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். புலியகுளம் பெரியார் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பெரியார் திராவிடர் கழகத்தின் மாநகர தலைவர் வீரமணி தலைமை தாங்கினார். கோவை மண்டல செயலாளர் சந்திரசேகர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பி. அறிவொளி, எஸ். மாணிக்கம் சக்திவேல் உள்ளிட்டோரும் ,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகராஜ், தேவராஜ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.



## "அலெக்சாண்டிரா கொலோண்டை அடக்குமுறைகளுக்கு அஞ்சாத புரட்சிப் பெண்மணி"

உலகத்தின் மாற்றங்களில்,விடுதலைகளில் பல பெண்களின் பங்களிப்புகள் உண்டு. அந்த வகையில் சோவியத் புரட்சியில் பல்வேறு அடக்குமுறைகளுக்கு அஞ்சாது பங்கேற்ற ஒரு பெண்மணி தான் அலெக்சாண்டிரா கொலோண்டை..இவரைப் பற்றி ஆசிரியர் எஸ்.கணேசன், "அலெக்சாண்டிரா கொலோண்டை அடக்குமுறைகளுக்கு அஞ்சாத புரட்சிப் பெண்மணி" என்கிற இந்தப் புத்தகத்தை எழுதி இருக்கிறார்.

மிகப் பெரிய செல்வ குடும்பத்தின் செல்ல மகள். மிகுந்த பாசத்தோடு வளர்க்கப்பட்டவள். பாசத்தின் காரணமாக இவளைப் பிரிய மனமின்றி பெற்றோரால் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்கவில்லை. வீட்டிலேயே ஆசிரியர் வைத்து இவளுக்கு பாடத்தை சொல்லிக் கொடுத்தனர். ஆசிரியராக வந்தவர் முற்போக்கு சிந்தனையாளர், மிகச் சிறந்த அறிவுஜீவி, இவளின் உள்ளத்தில் நாட்டின் விடுதலை உணர்வையும், சமதர்ம சிந்தனையையும் ஊட்டினார்.




லெனின் நடத்திய தீப்பொறி, பிராவ்தா எனும் இதழ்கள். இவர் உள்ளத்தில் சில தீப்பொறிகளை தூவியது. லெனின் நடத்தும் புரட்சிகர போராட்டத்திற்கும்,சமூக மாற்றத்திற்கும்,ஜார் மன்னனை வீழ்த்தவும் உறுதுணையாக இருந்து தொடர்ந்து போராட வேண்டும் என்று எண்ணினார். இதற்காக தொழிலாளி வர்க்கத்தை திரட்ட முன்வந்தார். "கம்யூனிசம் இல்லாத சமுதாயத்தில் என் குழந்தை கல்வி இல்லாமல், மருத்துவம் இல்லாமல் வாழும் போது, மனிதர்களின் மனதிலும், உடம்பிலும் தீப்பற்றி எரியும்போது புனித இலக்கியத்தை வைத்து என்னால் மணி ஆட்டிக் கொண்டிருக்க முடியாது. சொந்த நாட்டு மக்களையும், மற்றவர்களையும் சுரண்டிப் பிழைக்கும் ஒரு பொறுக்கி கூட்டம். இந்த மக்களை அடிமையாக வைத்துக்கொண்டு ஆட்டம் போடுவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே மனித சமூக விடுதலைக்காக, சோசலிச சமுதாயம் அமைக்க நடக்கும் போராட்டத்தில், புரட்சியில் கலந்து கொள்வதே எனது கடமை. எனது போராட்ட பயணம் தொடரும் என்றார். பல மார்க்சிய நூல்களை எல்லாம் கற்றுத் தேர்ந்தார்.

ஜெர்மனுக்கு தப்பிச்சென்று அங்கு கிளாரா ஜெட்கின், ரோசா லக்சம்பர்க், ஆகியோருடன் சேர்ந்து ஜெர்மானிய பெண் பாட்டாளிகளை வர்க்க ரீதியாக அணி திரட்டினார். அக்டோபர் புரட்சிக்கு முன்பு கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் ஆனார். புரட்சிக்கு முன்பு கூடிய அவசர மத்திய கமிட்டி கூட்டத்தில் ஆயுதம் தாங்கிய புரட்சி நடத்த ஆதரவாக வாக்களித்தார். ரஷ்ய புரட்சி வெற்றி பெற்ற பின்னர்.சோவியத் அரசாங்கத்தின் சமூக நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் நார்வே நாட்டின் சோவியத் தூதராக நியமிக்கப்பட்டார். உலகத்தில் இவர்தான் முதன்முதலாக நியமிக்கப்பட்ட பெண் தூதுவர். இவரைப் பற்றிய பல்வேறு செய்திகளை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். – **சமரன்**

**நூலாசிரியர் : எஸ்.கணேசன்**
**வெளியீடு : சண்முகம் பதிப்பகம்,**
**136, சத்தியமூர்த்தி மெயின் ரோடு, மீனாம்பாள்புரம்,**
**மதுரை 625003 செல்: 9786389946**
**பக்கங்கள் : 108 விலை : ரூ.75**

# நூல் நயம்

## ஓ2- ஆக்சிஜன்- உயிர்வளி சிறுகதைச் சாரம்

நம் அன்றாட வாழ்வில் சந்திக்கிற சிறுசிறு சம்பவங்களை ஒரு சரமாக தொடுத்துள்ளார் நூலாசிரியர். இதிலுள்ள ஒவ்வொரு சிறுகதையும் மலர்களைப் போன்று மணம் வீசுகிறது; அழகூட்டுகிறது. ஞா.சிவகாமி எழுதிய ஓ2 ஆக்சிஜன் உயிர்வளி சிறுகதைச் சரம்

கடந்த இரண்டு ஆண்டு காலமாக உலகத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா பெரும் தொற்று மனிதர்களை படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது. இவற்றால் மனிதர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும், வலிகளும் கொஞ்ச நஞ்சமல்ல. மருத்துவ தேவைக்கான ஆக்சிஜன் பற்றாக் குறையால் நாடே பதறி போனது. ஆக்சிசன் என்னும் கதை உயிர் காற்றின் உன்னதத்தைப் பேசுகிறது. மரத்தை மனிதன் வாழ வைத்தால், மனிதனை மரம் வாழ வைக்கும். மரம் இல்லையேல் மனிதன் இல்லை என்பதை இந்நோய் மனிதர்களுக்கு உணர்த்தி இருந்தால் நல்லது. அதுதான் உயிர் காற்றின் உன்னதம்.




தேர்தல் வருகிற போதெல்லாம் வாக்குகள் கேட்டு வேட்பாளர்கள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் மட்டும் நிறைவேற் றப்படுவது இல்லை. விடுதலைப் பெற்று 70 ஆண்டுகள் ஆனபோதும்,ஒரு பகுதி மக்களுக்கு இன்னும் குடிப்பதற்கு கூட குடிதண்ணீர் கிடைப்பதில்லை என்கிற யதார்த்தத்தை தான் 'தண்ணீர் கண்ணீர்' கதை பேசுகிறது. இருக்கிற ஒரு கிணறு ஊர்கிணறு,அதை சேரி மக்கள் பயன்படுத்த முடியாது என்ற யதார்த்தத்தையும் இந்த கதை சுட்டிக்காட்டுகிறது. விதை வெடிக்கும், வெடிக்கிற பொருள் பரவும் எனவே புத்தகங்களை விதைக்கவேண்டும் விதை போல் அறிவு பரவ வேண்டும். பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டில் கூட சாப்பிடலாம் என்கிற நமது முன்னோர்களின் மருத்துவ அறிவு.அந்த அறிவை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாரம்பரிய சமையல் பொருட்களை ஒதுக்கி விடக் கூடாது. பெண்களை குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்க சட்டம் இருக்கிறது. இனியும் அடுப்படியில் ஒளிந்து கிடக்க மாட்டார்கள் பெண்கள் என்பதை பரிசு என்கிற சிறுகதையில் கூறியுள்ளார். குழந்தை தொழிலாளர் கொடுமைகள் இன்னும் தீராமல் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடர்வதைத் தான் இடைநிற்றல் கதை பேசுகிறது. எளிய நடையில் சாதாரண கருப்பொருளை கொண்டு எழுதப்பட்டுள்ள இந்த சிறுகதைத் தொகுப்பு நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ஞா. சிவகாமி**
**வெளியீடு : முல்லை பதிப்பகம், 323 /10,கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை 40, செல்: 9840358301**
**பக்கங்கள் : 96 விலை : ரூ.100**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: **அருண் அசோகன்**

## கேப்ரியல் போரிக் தலைமையிலான அமைச்சரவை அறிவிப்பு



# 24 பேர் கொண்ட அமைச்சரவையில் 14 பெண்கள்

**சிலி நாட்டில் அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் கேப்ரியல் போரிக் மாபொரும் வெற்றி பெற்றார். சிலி நாட்டின் வருங் காலத்திற்கான தனது தொலைநோக்கு திட்டத்தை ஏற்காத பகுதியினரையும் உள்ளடக்கிய சிலி நாட்டின் அனைத்து பகுதி மக்களுக்காகவும் பணியாற்றுவேன் என்று கேப்ரியல் போரிக் அறிவித்திருந்தார். அதன் முதல் கட்டமாக, அவரது புதிய அமைச்சரவை பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.**

இதுவரை சிலி நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றவர்களில், 35 வயதேயான கேப்ரியல் போரிக் தான் மிகவும் இளையவர் ஆவார். அவரது தலைமையிலான 24 பேர் கொண்ட அமைச்சரவையில் 14 பெண்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளவரின் சராசரி வயது 49 ஆகும். சிலி நாட்டு அரசியல் வரலாற்றில் பெண்கள் பெரும்பான் மையாக இடம்பெற்றுள்ள முதல் அமைச்சரவை இதுவே ஆகும்.

'மாயா பெர்னாண்டஸ் ஹாலந்தே' என்ற பெண்மணியை பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமித்துள்ளார் போரிக். இவர், 1973 ஆம் ஆண்டு வலதுசாரி ராணுவ நடவடிக்கையால் நீக்கப்பட்ட இடதுசாரி அதிபரான 'சால்வடோர் ஹாலந்தே'வின் பேத்தி ஆவார். சர்வாதிகார ஆட்சிக்காலங்களில் எண்ணற்ற சலுகை களையும், ஒப்பந்தங்களையும் அனுபவித்து வந்த ராணுவத் துறையில் இவர் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இருக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு நாடு கடத்தப்பட்ட மாயா பெர்னாண்டஸ் குடும்பத்தினர் கியூபாவில் வாழ்ந்து வந்தனர். 1990 ஆம் ஆண்டில் சிலி நாட்டிற்கு மீண்டும் திரும்பினார்.

அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிரப் பிரிவின் முன்னாள் தலைவரான இஷ்கியா சைச்செஸ் என்ற பெண்மணி சிலியின் உள்நாட்டு துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் காவல்துறையையும் நிர்வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் எழுச்சிமிகு தலைவரும், மாணவர் போராட்டத்தில் முன்னணித் தலைவராக விளங்கிய கேமிலா வாலிஜோ (வயது 33) அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் சிறப்புமிகு ஆளுமையாக விளங்கி வரும் இவர், உலகின் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் புரட்சிகரப் பெண் என்று அறியப்படுகிறார்.

அதிபர் கேப்ரியல் போரிக் அமைச்சரவையில் பெண்கள் பெரும்பான்மை வகிப்பது அந்நாட்டு அரசியல் நிர்ணய சபையில் திகழும் பாலின சமத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது. அந்நாட்டு அரசியல் நிர்ணய சபையில் 50 சதவிகிதம் பெண்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. உலக வரலாற்றில் பாலின சமத்துவம் இந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது இதுவே முதல்முறை ஆகும். அரசியல் நிர்ணய சபையின் தலைவராக மரியா எலிசா குவிந் தேரோஸ் பொறுப்பு வகித்து வருகிறார்.

மாயா பெர்னாண்டஸ் ஹாலந்தே உள்ளிட்ட மூன்று கம்யூனிஸ்டுகள் அதிபர் கேப்ரியல் போரிக் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். இது குறித்து சிலி கம்யூனிஸ்ட் கட்சி பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளது: " சிலி மக்களின் கண்ணியத்தைப் பாதுகாக்க கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தொடர்ந்து போராடுவோம்."

### ஏழை நாடுகளின் சுகாதாரப் பணியாளர்களை

# சுரண்டும் பணக்கார நாடுகள்

வளர்ச்சியடைந்த மற்றும் பணக்கார நாடுகளே உலக அளவில் வறுமை நிலவுவதற்கு முக்கிய காரணமாக உள்ளன. அந்த நாடுகள் தொழிற்புரட்சிக்கு முன்பிலிருந்தே தொழிலாளர்களைச் சுரண்டி வருகின்றன. இன்றைய நவீன யுகத்தில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது தொழில்நுட்ப ரீதியாக மேலும் தீவிரமாக அதிகரித்து வருகிறது.

இன்றைய பெருந்தொற்று காலத்திலும் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது தொடர்கிறது. தொழிலாளர்களின் திறனும் அனுபவமும் சுகாதாரத் துறையில் தற்போதைய அவசியத் தேவைகளாக உள்ளன. தொலைதூரத்தில் உள்ள வளர்ந்த நாடுகளின் நிறுவனங்கள் கூட பிற நாட்டில் உள்ள சுகாதாரத் துறைத் தொழிலாளர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாக அறிவித்து வருகின்றன. தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கும் விளம்பரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அறிவிப்புகள் சமூக ஊடகங்களில் சரமாரியாக வந்து விழுகின்றன.

பெருந்தொற்று மூன்றாம் ஆண்டில் நுழையும் தருவாயில், போதிய எண்ணிக்கையில் சுகாதாரப் பணியாளர்கள் இல்லை என்பது அனைத்து நாடுகளிலும் பிரச்சனையாக எழுந்துள்ளது. சர்வதேச அளவில் தொழிலாளர்களின் புலம் பெயர்தல்அதிகரித்துள்ளது. மேலும் , பெருந்தொற்று காலத்தில் போதிய சுகாதார கட்டமைப்பு இல்லாத ஏழை நாடுகளில் உள்ள தொழிலாளர்களை பணக்கார நாடுகள் வேலைக்கு சேர்க்கும் நெறிமுறைகள் பற்றி பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காரணமாகத் தொய்வுற்ற தங்களின் சுகாதாரத்துறையைச் சீரமைக்க கனடா, அமெரிக்க மற்றும் பிரிட்டன் ஆகிய வளர்ந்த நாடுகள் வளரும் நாட்டைச் சார்ந்த மருத்துவப் பணியாளர்களை அதிவிரைவாக வேலைக் குச் சேர்த்து வருகின்றன.

ஆப்பிரிக்க நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து ஒவ்வொரு மாதமும் சுமார் 1000 செவிலியர்கள் அமெரிக்காவில் பணியமர்த்தப்படுகிறார்கள். அமெரிக்காவில் செவிலியர் பணிக்காக வெளிநாட்டைச் சார்ந்த சுமார் 10000 நபர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகள் பிறநாட்டில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவப் பணியாளர்களின் கல்வித் தகுதிகளை அங்கீகரிப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தும் பிரத்தியேக நிர்வாக ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

பிரிட்டன் நாட்டின் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பிட அந்நாட்டு அரசாங்கம் 2020 ஆம் ஆண்டிலேயே சிறப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின்படி விசா கட்டணங்கள் குறைக்கப்பட்டன. இதுபோன்ற மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரிட்டன் அரசாங்கம் சிவப்பு பட்டியல் ஒன்றை நடைமுறையில் வைத்துள்ளது. அந்தப் பட்டியலில் பலவீனமான சுகாதார கட்டமைப்பு உள்ள நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அந்நாடுகளைச் சார்ந்த மருத்துவப் பணியாளர்கள் யாரும் பிரிட்டன் நாட்டு தேசிய மருத்துவச் சேவையில் பணியமர்த்தப்பட மாட்டார்கள். ஆனால், தற்போது தனியார் மருத்துவ நிறுவனங்கள் மூலமாக சிவப்பு பட்டியலில் இடம்பெற்றுள்ள நாடுகளைச் சார்ந்த மருத்துவப் பணியாளர்கள் வேலைக்குச் சேர்க்கப்படுகிறார்கள். அவ்வாறு வேலைக்குச் சேர்ந்தவர்கள் , சில காலங்களுக்குப் பிறகு பிரிட்டன் நாட்டு தேசிய மருத்துவ சேவையில் அதிக ஊதியத்திற்கு சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற செவிலியர்களின் மொழித் திறன் உள்ளிட்ட பல தகுதிப்பாடுகளை அங்கீகரிக்கும் நிர்வாகச் செயல்முறைகள் கனடாவிலும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

வளரும் நாடுகளைச் சார்ந்த சுகாதார பணியாளர்களை வளர்ந்த நாடுகள் முறைகேடான வழிகளில் கவர்ந்திழுத்து புலம்பெயரச் செய்வது அந்நாட்டு ஏழை மக்களின் மருத்துவ சேவை பெறுவதற்கான உரிமையைப் புறந்தள்ளும் அபாயத்தை உண்டாக்கியுள்ளது.

## விண்ணை முட்டும் உணவுப் பொருட்கள் விலையேற்றம்

உலக அளவில், உணவுப் பொருட்களின் விலை கடந்த 2021 ஆம் ஆண்டு 28 சதவிகிதம் உயர்ந்தது. கடந்த பத்து ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச விலையேற்றம் ஆகும். இந்த ஆண்டும் ஸ்திரமான சந்தைச் சூழல் திரும்புவதற்கான அறிகுறிகள் மிகக் குறைவாகவே உள்ளது என்று ஐ.நா சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று நெருக்கடியில் இருந்து நாடுகள் மீண்டு வரும் சூழலில், உணவுப் பொருட்கள் விலையேற்றம் பணவீக்க உயர்வுக்கு வித்திட்டுள்ளது. இந்த விலையேற்றம், இறக்குமதிகளைச் சார்ந்து இயங்கும் நாடுகளில் உள்ள ஏழை மக்களை அதிக பாதிப்புக்கு உள்ளாக்கும் என்று ஐ.நா அமைப்பு எச்சரித்துள்ளது. பொதுவாக, பொருட்களின் விலை உயர்வு உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், உள்ளீடுகளின் விலை உயர்வு, தொடரும் பெருந்தொற்று, நிச்சயமற்ற பருவகாலச் சூழல் ஆகியவை ஒரு ஸ்திரமான சந்தைச் சூழல் 2022 ஆம் ஆண்டிலாவது திரும்பும் என்ற நம்பிக்கையைச் சிதைத்து வருகின்றன என்று உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மூத்த பொருளியல் நிபுணரான அப்பாசியன் அண்மையில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.



# பட்ஜெட்டில் ஏழைகளுக்குக் குறைந்தபட்ச வருமானம் கிடைக்க உறுதி செய்க!

## பெரும் பணக்காரர்கள் மீது சமத்துவமின்மை வரி விதித்திடுக!

**நித்தியா சக்ரவர்த்தி**

**தேவோஸில் உலகப் பொருளாதார ஃபோரத்தின் மெய்நிகர் கூட்டம் நடைபெறும் அதே நேரம் ஆக்ஸ்பாம் சர்வதேச ஆய்வு அமைப்பின் சமத்துவமின்மை குறித்த அறிக்கை வெளியாகி ஓர் உண்மையை அம்பலப்படுத்திவிட்டது.**

இந்தியா உட்பட உலகத்தில் கரோனா பெருந்தொற்றின் இரண்டாண்டு காலம் எவ்வாறெல்லாம் சமத்துவமின்மையை, ஏழை பணக்காரர்கள் இடையே உள்ள இடைவெளியை மேலும் அகலப்படுத்தியதை மிகத் தெளிவாக வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவில், தற்போதைய அரசிடம் ஏழைகளைப் பாதுகாக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்கு முறைக்குப் பற்றாக்குறை இருப்பதால், நிலைமை இருள் சூழ்ந்து ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேலும் மோசமாக்கி உள்ளது.

தற்போது நிதியமைச்சகம் மற்றும் பிரதமர் அலுவலக விவாதங்களில் 2022–23ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் வடிவமைப்பது எப்படி எனத் தொழிலதிபர்கள், பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் யோசனைகள் பரிசீலிக்கப்படுகின்றன. பிப்ரவரி 1ல் பட்ஜெட் தாக்கலான பிறகு வழக்கம்போல பிரதமரும், நிதியமைச்சரும் புதிய பட்ஜெட்டில் முன்மொழியப்பட்ட திட்டங்கள் இந்தியாவைப் புதிய உச்சத்திற்கு, கொண்டுபோய்விடும் என மார்தட்டுவார்கள் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

கடந்த ஏழாண்டு கால நரேந்திர மோடி தலைமையிலான என்டிஏ அரசு பின்பற்றிய வளர்ச்சிப் பாதை சமத்துவமின்மை இடைவெளியை மட்டுமே அகலப்படுத்தியது; ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியும் பணக்காரர்களுக்கு அனுகூலமானது; ஏழைகள் மற்றும் இந்தியச் சமூகத்தின் குறைந்த வருமானப் பிரிவினரின் வாழ்வை விலைபேசி பணக்காரர்கள் லாபத்தைக் குவிக்கின்றனர்.

கடந்த இரண்டாண்டு பெருந்தொற்று காலத்தில் இந்நிகழ் முறைப் போக்கு மேலும் தீவிரமடைந்தபோதெல்லாம் அல்லற்படுபவர்களுக்கு அரசு நிவாரண உதவி சலுகைகளைத் தொடர்ந்து வழங்குவதாக அறிவிப்புகளை மட்டும் வெளியிடத் தவறவில்லை.

தொற்றின் முதல் அலையின்போது 2020 மார்ச் 24ல் திடீரென்று நாடு முழுவதும் முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து தினக் கூலிகள், சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் ஊழியர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் தனியார் சிறுநிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை இழந்து, வறுமையில் உழன்றனர். இதே காலகட்டத்தில் இந்தியப் பணக்காரர்களின் நிலை என்ன? நாட்டின் பொருளாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தபோது அப்பணக்காரர்கள் சாதனை அளவாகத் தங்கள் செல்வத்தை அதிகரித்து வந்தார்கள்.

இந்தியச் சமத்துவமின்மை மீதான ஆக்ஸ்பாம் ஆண்டறிக்கை, மோடி அரசின் ஆட்சி முறை ஒரு சிலர் செல்வம் குவிக்கப் பெரும் ஆதரவு தந்ததையும், பிற மக்கட் பகுதியினருக்குப் பாதுகாப்பு வழங்குவதில் தோல்வியடைந்ததையும் மையப்படுத்தி சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அதிபணக்காரக் குடும்பங்களின் செல்வத்தின் மீது வெறும் ஒரு சதவீதம் வரி விதிப்பதன் மூலம் 130 கோடி மக்கள் தொகை உடைய இந்திய மக்கள் அனைவருக்கும் ரூ50கோடி மதிப்பிலான (6.8 பில்லியன் டாலர்) தடுப்பூசி திட்டத்தை நிறைவேற்றிவிடலாம் என அந்த அறிக்கை கூறுகிறது. “அதற்கு மாறாக இந்தியாவில் வரிவிதிப்பின் சுமை, இந்திய நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் ஏழைகளின் தோள் களின் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ளது. ‘கோவிட் 19 தொற்றிலிருந்து மீண்டு வருவதற்காக அதிபணக்காரர்கள் மீது ஒரே ஒரு முறை வெறும் ஒரு சதவீதம் வரி விதியுங்கள்’ என்ற யோசனையை இந்திய அரசு பரிசீலிக்கவே இல்லை.

அதனால், மீதமுள்ள ஒரே வாய்ப்பு மறைமுக வரிவருமானம் மூலம் நிதிதிரட்டுவதை அரசு பயன்படுத்துகிறது அது மீண்டும் ஏழைகளையே தண்டிக்கிறது” என ஆக்ஸ்பாம் அறிக்கை கூறுகிறது.

கோவிட்19க்கு முன் 2019 செப்டம்பரில் மோடி அரசு உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் கார்ப்பரேட் வரி விகிதத்தை 30 சதவீ தத்திலிருந்து 22 சதவீதமாகக் குறைத்தது; புதிய உற்பத்தி நிறுவனங்கள், வேறு எந்த விலக்குச் சலுகைகள் கோராத பட்சத்தில், அவைகளுக்கு 25லிருந்து 15 சதவீதமாகவும் வரியைக் குறைத்தது. இம்முடிவை அமல்படுத்த அரசுக்கு வெறும் 36மணி நேரம் போதுமானதாக இருந்தது; முடிவெடுத்த பிறகு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறலாம் என்று பிரதமருக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கும் விதி 12 அதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் நாடுகளின் கடன்பெறும் அந்தஸ்து தரப் பட்டியலில் இந்தியாவின் அந்தஸ்து குறைந்து விட்டது.

**அவ்வறிக்கையில் திகைக்க வைக்கும் செய்தி,**

**142 இந்திய பில்லியனர்கள் (100 கோடிக்கும் மேல் சொத்துடைய அதிகோடீஸ்வரர்கள்) ஒட்டு மொத்தமாக 719 பில்லியன் (53லட்சம் கோடிக்கும் மேல்) சொத்துகளை வைத்துள்ளனர். அதில் முதலில் உள்ள 98பேர் சொத்து மட்டும் இந்தியாவின் அடித்தட்டில் மிக ஏழ்மையில் உள்ள 55.5 கோடி ஏழைகளின் மொத்த செல்வத்தில் 40 சதவீதம் (657பில்லியன் டாலர் அல்லது சுமார் 49 லட்சம் கோடி ரூபாய்.)**

இவர்கள் மீது 4 லிருந்து 5 சதவீத வரி விதித்தாலே அனைவருக்குமான அடிப்படை வருமானம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திவிட முடியும். அந்த நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழைகளுக்கு மாதத்திற்கு நாலாயிரம் முதல் ஐந்தாயிரம் வரை, குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு அளிக்க முடியும்.

நாடு சந்திக்கும் அசாதாரண சூழ்நிலை, நமது சமூகத்தின் எளிதில் பாதிப்படையக் கூடிய நலிந்த பிரிவு மக்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளைக் கோருகிறது. ஏற்கனவே ஏழைகளும் திரட்டப்படாத தொழிலாளர்களும் 2020ன் கொரோனா முதல் அலையில் மிக மோசமாகத் துன்பப்பட்டார்கள். அதே நிலை தொடர 2021ன் இரண்டாம் அலையிலும் இப்போது தொற்றின் மூன்றாம் அலையின் பிடியிலும் அவர்கள் சிக்கியுள்ளனர்.

இதனால் நான்கு கோடி மக்களுக்கும் மேல் ஏழைகள் எண்ணிக்கையில் மீண்டும் சேர்ந்து விட்டார்கள் என்று இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் ஏற்கனவே தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே இந்த அசாதாரண சூழ்நிலையில் மேற்கொள்ள வேண்டிய சிறந்த தேர்வு யாது? புகழ்பெற்ற வளர்ச்சிக்கான பொருளாதார நிபுணர்கள் குறைந்தபட்ட அடிப்படை வருமானம் வழங்கும் திட்டமே இந்தியச் சமூகத்தின் எளிய பிரிவினருக்குப் பொருத்தமாதெனத் தற்போது கூறி வருகிறார்கள். பெரும்பான்மை சமூகத்தின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த இதுவே ஒரே வழி. அப்படி அவர்கள் கையில் குறைந்தபட்ட வருமானத்தை வழங் கினால் அடிப்படைத் தேவைகளை வாங்க அவ்வருமா னத்தைப் பயன்படுத்துவார்கள் என்பதால் சந்தையில் பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும்; அந்தத் தேவையை நிறைவேற்ற உற்பத்தி கூடும், இது நாட்டின் பொருளாதாரத்தின் மீது நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும்.

அமெரிக்கா பொருளாதாரத்தில் உச்சத்தில் இருக்கும் முதலாளித்துவ நாடு. அந்நாட்டில்கூட அதிபர் ஜோபிடன் அமெரிக்கச் சமூகத்தின் அடித்தட்டு பிரிவினர்களுக்குக் கூடுதல் வருவானத்தை உறுதிசெய்து வழங்கும் வகையில் மீட்புத் தொகுப்புத் திட்டங்களை வடிவமைத்தார். மேலும் தொழிலாளர் வர்க்கத்திற்கு ஆதரவான பிற நடவடிக்கைகளையும் முன் வைத்துள்ளார்.

புகழ் வாய்ந்த பெரும் பொருளாதார நிபுணர்கள் அமர்தியா சென், அபிஜித் பானர்ஜி மற்றும் ரகுராம் ராஜன் போன்றவர்கள் கூறிய புதுமையான யோசனைகளை ஒன்றிய அரசு ஏற்க மறுத்தது; மாறாக, உறுதியற்று நிலை தடுமாறும் பெரும் வங்கிக் கடன்கள் அடிப்படையிலான மீட்புத் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தது:

ஆனால் எதார்த்த உண்மை நிலைமையோ மங்கலாக இருள் சூழ, அந்நிலையில் எந்த ஒருவரும் கையில் மூலதன நிதி வைத்திருப்பவரும்கூட செலவு செய்யும் மனநிலையில் இல்லை. திகைக்க வைக்கும் பெரும் எண்ணிக்கையில் உள்ள ஏழைகளையும் வேலையற்றவர்களையும் செலவு செய்யத் தூண்ட முடியும், அப்படித்தான் நுகர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க முடியும். அது எப்படிச் சாத்தியம்? அதற்குத்தான் நேரடியாக நிதியளிப்பதன் வாயிலாக அனைவருக்கும் குறைந்தபட்ச அடிப்படை வருவாய் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் சாத்தியம்.

அனைவருக்கும் வருவாய் கிடைக்கச் செய்யும் யுபிஐ பிரச்சனை மேற்கத்திய உலகில் பெரும் விவாதங்களை உண்டாக்கியது. குறிப்பாக அமெரிக்காவில் சமத்துவமின்மை பிரச்சனை பெருமளவில் கடந்த அதிபர் தேர்தலின்போது அங்கே விவாதத்தில் முன் வந்தது. அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் முன்னணித் தலைவர் பெர்னி சான்டர்ஸ் ‘ஒரு சதவீதத்தினர் நலனுக்காக நடைபெறும் பொருளாதாரம்’ பற்றி விமர்சிக்கும்போது, ‘பொருளாதார முறைமையை 99 சதவீதத்தினர் சார்புடையதாக மாற்ற’ வாக்குறுதி அளித்தார். வருமானத்தில் கடுமையான சமத்துவ மின்மையும் ஏழ்மையும் உள்ள நாடுகளில், ஏன் உலக அதிகாரச் சக்தியாகத் திகழும் அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளிலும், நிச்சயம் குறைந்தபட்சம் ஒரு சராசரி வலிநிவாரணியாக அத்திட்டம் இருக்கும்’ என வாதிட்டனர்.

இப்போதைய பிரதான தேவை மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவது மற்றும் நுகர்ச்சிக்கு வழிசெய்வதன் மூலம் இந்தியப் பொருளாதாரத்திற்கும் ஊக்கமளிப்பது.

இப்போதுகூட பிரதமர் நரேந்திர மோடி குறைந்தபட்ச அடிப்படை வருமானம் வழங்கும் திட்ட யோசனையைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு ஏழைகளுக்கு உதவி இந்தியப் பொருளாதாரத்தையும் அழிவிலிருந்து மீட்டுப் பாதுகாக்க முடியும். அதற்குத் தேவைப்படும் நிதியாதாரத்தைத் திரட்ட அதிபணக்காரர்கள் மீது வரி விதித்துச் சுலபமாகத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

அதிபணக்காரர்கள் மீது கூடுதல் வரி விதிக்கும் கோரிக்கையை எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகள் வற்புறுத்தி தங்கள் குரலை ஒலிக்க வேண்டும். கரோனா பெருந்தொற்றால் பெரும் பாதிப்புக்கு உள்ளான கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகளின் துன்ப துயரங்களைக் குறைப்பதற்கான ஒரே வழி இதுதான்.

அதே நேரம் நுகர்வால் சந்தையில் பொருட்களின் தேவை அதிகரித்து உற்பத்தியும் நம் பொருளாதாரமும் ஊக்கம் பெறும்.

எதிர்வரும் மத்திய பட்ஜெட் நிபுணர்களின் அறிவுரையைப் பிரதிபலிக்குமா? மில்லியன் டாலர் கேள்வி.

தமிழில்: **நீலகண்டன்**















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 05.02.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57







# மார்ச் 28 29 தொழிற்சங்கங்கள் போராட்டம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

## இரா.முத்தரசன் பேட்டி

**ஜனவரி 28 அன்று நெல்லை தூத்துக்குடி தென்காசி ஆகிய மூன்று மாவட்டங்களின் பேரவைக் கூட்டம் நெல்லை பாலன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:**

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பத்தாண்டு காலமாக நடைபெறாமல் இருந்த சூழ்நிலையில் தற்போது தமிழக அரசு நடத்துவதற்கு முன் வந்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஆட்சியின் மீது மக்களுக்கு நல்ல அபிப்ராயங்கள் ஏற்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் பலவற்றை நிறைவேற்றி உள்ளார்கள். குறிப்பாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் கொடுத்தது, பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணம் இல்லாத பயணம், பொங்கல் பரிசு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளனர்.

மதசார்பின்மை கொள்கையில் மிக உறுதியாக இருக்கின்றார்கள்.

ஒன்றிய அரசு மாநில உரிமைகளை பரிப்பது ஐஏஎஸ் அதிகாரிகளை நாங்களே எடுத்துக் கொள்வோம் என்று ஒரு திட்டம் மேற்கொள்வது இவைகளெல்லாம் எதிர்த்து உறுதியாக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் நீட் நுழைவுத்தேர்வு ரத்து செய்வோம் என்று தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் சட்டப்பேரவையில் அதற்கான மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருடைய ஒப்புதலுக்காகவும், அவர் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்பதற்காகவும் செப்டம்பர் மாதம் அனுப்பப்பட்ட அந்த மசோதா இன்று வரை கிடப்பில் கிடக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டை சேர்ந்த அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் உட்பட உள்துறை அமைச்சரை சந்தித்து முறையிட்டுள்ளார்கள்.

ஆகவே இது போன்ற பிரச்சினைகளிலும் மாநில உரிமைகளை பாதுகாப்பதிலும் மக்களுக்கு நல்ல திட்டங்களை செய்வதிலும் மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அடிப்படையில் எங்கள் அணி மகத்தான வெற்றி பெறும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

அதேபோல் ஒன்றிய அரசு மாநில அரசுகளின் அதிகாரங்கள் அனைத்தையும் பறித்து அனைத்து அதிகாரங்களும் ஒன்றிய அரசுக்கே என்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது அப்பட்டமான ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு செயலாகும். ஏற்கனவே மாநிலங்களுக்கு உள்ள உரிமைகள் போதுமானதாக இல்லை அதை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை அனைத்து மாநிலங்களிலிருந்தும் வலிறுத்தப்படுகிறது.

விடுதலை பெற்ற பிறகு ஏராளமான பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பண்டிதர் ஜவகர்லால் நேரு அவர்கள் நம் நாடு இன்னொரு நாட்டை நம்பி இருக்க கூடாது சொந்த காலில் நிற்க வேண்டும் என்று ஒரு பெரும் முயற்சி எடுத்து பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி, இந்த பொதுத் துறை நிறுவனங்கள் இந்தியாவின் ஆலயம் என்று அவர் குறிப்பிட்டார்.

**இன்றைக்கு இருக்கின்ற மோடி தலைமையிலான அரசாங்கம் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் அடிமாட்டு விலைக்கு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் பெரு முதலாளிகளுக்கும் விற்பனை செய்து கொண்டிருப்பது நல்லதல்ல.**

குறிப்பாக ஏர் இந்தியா விமானம் முழுவதுமாக வெறும் 18 ஆயிரம் கோடிக்கு டாடா நிறுவனத்திடம் விற்கப்பட்டு விட்டது.டாடா நிறுவனத்திடமிருந்து எடுக்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டது. அது மீண்டும் இன்று அவர்களிடமே விற்கப்பட்டு விட்டது.

அது மட்டுமல்லாமல், ஆசியாவிலையே மிகப்பெரிய பொதுத் துறை நிறுவனமான ரயில்வேவை தனியார் நிறுவனமாக ஆக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள், பல்வேறு ரயில் நிலையங்களை தனியாருக்கு விட்டுவிட்டார்கள். சில வழித்தடங்களையும் தனியாருக்கு கொடுத்துவிட்டார்கள் எதிர்காலத்தில் ஒட்டுமொத்தமாக ரயில்வே தனியாருக்கு போகக்கூடிய மிகப்பெரிய அபாயம் இருக்கிறது.

அதேபோல் வங்கிகள் இப்போது தனியாருக்கு சென்று கொண்டிருக்கிறது. தற்சமயம் இரண்டு வங்கிகளை கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டார்கள். எண்ணெய் நிறுவனங்களை தனியாருக்கு விற்க முடிவு செய்து விட்டார்கள் இப்படி அனைத்தையும் தனியார் மயமாக்கி மக்களுக்கு எதிராக மக்கள் நலனைக்காட்டிலும் கார்ப்பரேட் முதலாளிகள், பெரு முதலாளிகள் லாபம் அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இப்படிப்பட்ட தொடர் முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவது மிக மிக கடுமையான கண்ட னத்துக்கு உரியது.

அதேபோல் நாட்டினுடைய மதசார்பின்மை கொள்கை, நாட்டில் உள்ள அரசியல் அமைப்புச் சட்டம், அரசியலமைப்பு சட்டத்தை கொண்டு உருவாகியுள்ள அமைப்புகளான நீதி மன்றம், தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி போன்ற பல்வேறு அமைப்புகள் இந்திய அரசால் சீர்குலைக்கப்பட்டு வருகின்றது. ஆகவே இவைகளை எல்லாம் எதிர்த்து வருகின்ற மார்ச் 28, 29 தேதிகளில் மதச்சார்பின்மை கொள்கை காப்பாற்றப்பட வேண்டும்!

அரசியல் அமைப்பு சட்டம் காப்பாற்றப்பட வேண்டும்! என்ற கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து மேற்கண்ட இரு தினங்களில் மாபெரும் நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றது.

இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது, ஆதரிக்கிறது, பங்கேற்கிறது நாட்டு மக்கள் அனைவரும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தர வேண்டும்.

அதேபோல் தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து என்பதை நீண்ட காலமாக பின்பற்றி வருகிறோம்.

கல்வி நிறுவனங்களில், அரசு நிறுவனங்களில் அரசு நடத்துகின்ற பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் இருக்கின்ற ரிசர்வ் வங்கி சார்பில் கடந்த 26ஆம் தேதி குடியரசு தினத்தன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து இசை ஒலித்த போது ரிசர்வ் வங்கி அதிகாரிகள் எழுந்து நிற்காதது மட்டுமல்ல பத்திரிகையாளர்கள் எழுந்து நிற்க்காதது ஏன்? தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதிப்பது சரியல்ல என்று கேள்வி எழுப்பிய போது... எழுந்து நிற்க வேண்டும் என்று சட்டமா உள்ளது என்று ஆணவத்தோடு கேள்வி எழுப்பியது மிக மிக கடுமையான கண்டனத்துக்கு உரியது. பின்னர் வருத்தம் தெரிவித்தார்கள்.

இப்படிப்பட்ட செயல்களை செய்பவர்கள் ஒன்றிய அரசு நிறுவனமாக இருந்தாலும் தனியார் நிறுவனமாக இருந்தாலும் தமிழ்நாட்டில் இத்தகைய போக்கை அனுமதிக்கக்கூடாது.

இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

### பிப்ரவரி 23, 24 ல் நடைபெறவிருந்த அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டம்

# மார்ச் 28, 29 ஆம் தேதிகளுக்கு மாற்றம்

## மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவிப்பு

மத்திய தொழிற்சங்கங்களுடைய கூட்டமைப்பின் இணையவழி கூட்டம் 28.01.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத மற்றும் தேச விரோத கொள்கைகளைக் கண்டித்து பிப்ரவரி 23, 24 ல் நடைபெறவிருந்த அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டத்தை மார்ச் மாதம் 28, 29 ஆம் தேதிகளுக்கு மாற்றிட முடிவு செய்யப்பட்டுள்ளது.




அதிகரித்து வரும் கொரோனா பெருந்தொற்று காரணமாக, வேலைநிறுத்தப் போராட்டத்திற்கான தயாரிப்பு பணிகளை முழு வீச்சில் மேற்கொள்வதில் பெரும் நடைமுறை சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக பல மாநிலங்களில் இருந்து தகவல்கள் வந்துள்ளன. மேலும், பிப்ரவரி 23 ஆம் நாள் உத்தர பிரதேசத்தில் முதல் கட்ட சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதையும், தமிழ்நாடு, ஒடிசா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற இருப்பதையும் கூட்டமைப்பு கவனத்தில் கொண்டு ஆலோசித்தது. அதன் அடிப்படையில், அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டத்தை மார்ச் 28, 29 ஆம் தேதிகளுக்கு மாற்றிட முடிவு செய்யப்பட்டது. மேற்கண்ட தேதிகளில், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரும் நடைபெறும்.

அழிவுகரமான, தேச விரோத கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஆட்சியாளர்களிடம் இருந்து தேசத்தையும், மக்களையும் பாதுகாத்திட மார்ச் 28, 29 நடைபெறவுள்ள அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றியடைந்திட தயாரிப்பு பணிகளைத் தீவிரமாகத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு தொழிலாளர்களையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறைகூவி அழைக்கிறது. குறிப்பாக, சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் பா.ஜ.கவைத் தோற்கடித்திட தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யுமாறு மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

இவ்வாறு கூட்டமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## கம்யூனிஸ்ட்களிடம் கிடைத்ததால் காவல்துறையிடம் வந்தது

### ● காவல்துறை பாராட்டு

பவானி செங்காடு ஊராட்சியில் தற்காலிகப் பணியாற்றி வரும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த கோகிலா தனது மூனரை பவுன் எடையுள்ள தங்க தாலிக்கொடியை தொலைத்து விட்டார். அவர் தான் சென்று வந்த பகுதிகளில் தேடி பார்க்கிறார் எங்கும் கிடைக்கவில்லை. இந்நிலையில் காடையம்பட்டி பகுதியை சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பவானி ஒன்றிய செயலாளர் கே.எம்.கோபால் அவர்களின் மனைவி ருக்குமணி தங்கத்தாலி கொடியை தெருவில் கண்டெடுத்துள்ளார். இந்த தாலிக்கொடியினை பவானி காவல்துறையிடம் ஒப்படைத்தனர். பவானி காவல்துறையினர் உரிய விசாரணை செய்து இந்த தாலி கொடிக்கு உரியவரான கோகிலா அவர்களிடம் ஒப்படைத்தனர். இந்த அரிய பணியை மேற்கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தம்பதியினரை பவானி காவல் துறை துணை கண்காணிப்பாளர் கார்த்திகேயன் நேரில் அழைத்து காவல் துறை சார்பாக பாராட்டி கௌரவித்தார். பவானி காவல் நிலைய காவல்துறை துணை ஆய்வாளர் கனகராஜ் உடனிருந்தார்.

பல்வேறு அமைப்பினர் இச்செயலை பாராட்டி வருகின்றனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.